பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 2 வெள்ளிக்கிழமை (18-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:232

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிய

# அரசாங்கத்தின் புதிய திட்ட வரைவு

# புலிகளிடம் நேற்றுக் கையளிப்பு!

### அவர்களின் பிரதிபலிப்பு உடனடியாக வெளியாகாது



கொழும்பு,ஜூலை18

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான அரசின் புதிய திட்டவரைவை நோர்வேயின் முன்னாள் தூதர் ஜோன் வெஸ்பேர்க் நேற்றுக் காலை கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்றார். காலை 10.30 மணியளவில் ஜோன் வெஸ்பேர்க், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்து திட்டவரைவைக் கையளித்து பேச்சுக்களை ஆரம்பித்தார். சுமார் ஒரு மணிநேரம் இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்தன.

அரசின் திட்டவரைவு ஜோன் வெஸ்பேர்க் மூலம் நேற்று கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டது என்பதை அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இம்மாநாட்டில் இதனை தெரிவித்த அவர், இத்திட்ட வரைவு தொடர்பான விடுதலைப் புலிகளின் பதில் ஓரிருதினங்களில் எதிர்பார்க்கப்பட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானச் செயலகத்தின் ஆயுள் 2005 ஆம் ஆண்டு வரை நீடிப்பு

கொழும்பு,ஜூலை18

அரசின் சமாதானச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் சமாதானச் செயலகத்தின் நடவடிக்கைக் காலம் நீடிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் பிரேரித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாவிடினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிபந்தனையின் பேரில் அப்பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயங்களுடன் பொலீஸாரின் சடலம்

### யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை18

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சடலம் அச்சுவேலிப் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாகலையைச் சேர்ந்த எஸ். கேவாவச (வயது35) என்ற பொலீஸாரின் சடலமே இது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தைக் கொழும்புக்கு எடுத்துச் சென்று உறவி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரதமருடன் நேற்றுச் சந்திப்பு

### வன்னிப் பேச்சுக்கள் குறித்து விளக்கம்

கடந்த மூன்று தினங்களாக வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்துப்பேசினார்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தான் நடத்திய பேச்சுக்களின் முழுமையான விவரத்தை அவர் பிரதமருக்கு எடுத்து விளக்கினார். சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளின் அண்மைய நிலைப்பாடு பற்றி அவர் பிரதமருக்கு விளக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்காணிப்புக் குழுவினர் எடுக்கும் முடிவுகளை அரசும் விடுதலைப் புலிகளும் இறுதியானதாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்திப்பின் போது பிரதமர் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவித்ததாக குழுவின் பேச்சாளர் நேற்றுத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது முப்படைத் தளபதிகளும் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் பிரதமருடன் இருந்தனர் என்றும் கூறப்பட்டது. (ம)

## மடு றோட் வீதியை பயன்படுத்த மடு பிரதேச மக்களுக்குத் தடை!

மன்னார்,ஜூலை18

மதவாச்சியில் இருந்து செல்லும் மடுறோட் வீதியில் பயணம் செய்வது சாதாரண பயணிகளுக்கு இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. மடுதேவாலயத்துக்கு செல்லும் யாத்திரிகர்கள் மட்டுமே இவ் வீதியில் பயணம் செய்ய இராணுவத்தினர் அனுமதி வழங்குகின்றனர்.

கடந்த மூன்றாம் திகதிமுதல் கொண்டுவரப்பட்டிருக்கும் இத்தடையால் அரச ஊழியர்கள் உட்பட இந்த வீதியில் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த ஒரு வருடமாக மடு பிரதேச மக்கள் மடு றோட் வீதியையே பயன்படுத்தி வந்தனர்.

மடுறோட் சோதனைச் சாவடியிலுள்ள இராணுவத்தினர் விதித்திருக்கும் இத்தடை குறித்து கண்காணிப்புக் குழுவினர், மன்னார் அரச அதிபர், இராணுவ அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

## முகாம் சர்ச்சை பற்றி ஆராய்வதற்கு கிளிநொச்சியிலிருந்து விசேட குழு!

### கிண்ணியாவுக்கு அனுப்பத் திட்டம்

கொழும்பு,ஜூலை18

திருகோணமலை, குரங்குபாஞ்சான் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டுவரும் முகாம தொடர்பான சர்ச்சையை முடிவுக்கு கொண்டுவர விடுதலைப் புலிகளால் கால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலிவ்சனை சந்தித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் புலிகள் தரப்பின் உயர்மட்ட குழுவொன்றை குரங்குபாஞ்சானுக்கு அனுப்பி அங்கு உண்மையான நிலைவரத்தை அறிந்த பின்னர் அப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக உறுதியளித்துள்ளார் என்றும் -

இதற்காக தமக்கு காலஅவகாசம் தேவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் அடுத்த வாரம் மீண்டும் கடற்புலிகளின் தளபதி சூசையைச் சந்தித்துப் பேசவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### முல்லைத்தீவு முகாம் தாக்குதல் நினைவு தினம்

முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட 7ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று முல்லைத்தீவு பொது மைதானத்தில் பெரும் எழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

மாலை 4 மணியளவில் ஆரம்பமாகும் இந்தப் பெருவிழாவில் விடுதலைப் புலிகளின் படை அணிவகுப்புக்களும் இடம்பெறும்.

முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் இருந்து சிறப்புப் பேருந்துப் பவனிகளும் முல்லைத்தீவு மைதானத்தை வந்தடையும். அதனைத்தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-5)

## உப்புவெளியில் இளைஞர் நேற்று சுட்டுக்கொலை!

திருகோணமலை,ஜூலை18

திருகோணமலை, உப்புவெளியில இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் சூட்டுக் காயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் உப்புவெளி 3ஆம் கட்டையடியில் இடம்பெற்றது.

அப்துல் பாஹிரா பௌசி என்றழைக்கப்படும் இளைஞரே பலியாகியுள்ளார். சேகர் என்ற இளைஞர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார், என்று தெரிவிக்கப்பட்டது. சுட்டுக்கொல்லப்பட்டவர் பொலீஸ் புலனாய்வுப்பிரிவு உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பௌசி ஒரு கூலித்தொழிலாளியாவார். லிங்கநகர் நோக்கி தனது நண்பருடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உப்புவெளி பொலீஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB

- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- வருடாந்தம் 17% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# பருத்தித்துறைத் துறைமுகம் இன்று அதிகாரசபையிடம் கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜுலை18

பருத்தித்துறை துறைமுகம் இன்று இலங்கைத் துறைமுக அதிகார சபையிடம் உத்தியோக பூர்வமாக கையளிக கப்படவுள்ளது. நண்பகல் 12 மணியளவில் இந்தக் கையளிப்பு வைபவ ரீதியாக இடம்பெறும்.

துறைமுகத்தைப் பொறுப்பேற்பதற கென இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் பராக்கிரம திஸநாயக்க தலைமையிலான குழுவொன்று கொழும்பில் இருந்து இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

வருகைதரும் குழுவில் துறைமுக அதிகார சபையின் உபதலைவர், பணிப்பாளர்கள் அடங்கலாக 13 பேர் இடம்பெற்றுள்ளனர்.

காலையில் இங்குவரும் இக்குழுவினர் யாழ்.செயலகத்துக்குச் சென்று அரச அதிபரைச் சந்திப்பர். பின்னர் பருத்தித்துறை துறைமுகத்திற்கு செலவர். அங்குவைத்து யாழ்.அரச அதிபர் துறைமுகத்தை அதிகாரசபைத் தலைவரிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பார்.

இதுவரைகாலமும் யாழ்.செயலகத்தில் அமைந்துள்ள புனர்வாழ்வுக் கிளையினால் பருத்தித்துறை துறைமுகம் மேற்பார்வை செய்யப்பட்டு வந்தது. அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவும் யாழ். செயலகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டுவந்தது.

இனிவருங்காலங்களில் துறைமுகப பராமரிப்பு மற்றும் ஊழியர் கொடுப்பனவு அனைத்தையும் துறைமுக அதிகாரசபையே மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் துறைமுகத்தை அதிகார சபையிடம் கையளிப்பதற்கு இதற்கு முன்னர் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது தற்போதேகைகூடியுள்ளது.

பருத்தித்துறை துறைமுகம் தற்போது படையினரின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கிஉள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-8)

# 'கலாசூரி' பத்மநாதனின் உடல் தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம்,ஜுலை18

ஈழத்தின் புகழ்பூத்த நாகசுர வித்பன்னர் கலாசூரி என்.கே.பத்மநாதனின் புகழுடல் நேற்று நண்பகல் 12 மணியளவில் தீயுடன் சங்கமமாகியது.

யாழ்.கில்னர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் புகழுடலுக்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் நேற்றுக் காலை அஞ்சலி செலுத்தினர்.

நண்பகல் அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

அதைத் தொடர்ந்து அவரின் புகழுடம்பு தாங்கிய பேழை, மலரால் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் சேமக்கலம், சங்கு ஒலிகள் முழங்க நிலப்பாவாடை விரித்து எடுத்துச் செல்லப்பட்டது.

கோம்பயன் மணல் மயானத்தில் நண்பகல் 12.30 மணியளவில் அவரின் புகழுடல் தீயுடன் சங்கமமாகியது. (ம-3)

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் மானப்பிரச்சினையால் பெண் ஊழியர்கள் கணக்காளருக்கு எதிராகப் போர்க்கொடி!

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற பெண் ஊழியர்கள் மானப்பிரச்சினை காரணமாக அந்த அலுவலகத்து கணக்காளருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை அம்பாறை மாவட்டக்கச்சேரிக்குப் படையெடுத்துச் சென்று, கணக்காளரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு அரச அதிபர் எஸ்.எஸ்.ஸி.சிறிவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலகக கணக்காளர் எஸ்.எல்.எம். இப்றாகிம். இதே அலுவலகத்தில் கடமை புரிகின்ற பெண்ஊழியர்களுடன் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து அலுவலக ஒழுங்கு முறைகளுக்கு முரணாகவும், அநாகரிகமாகவும் நடந்து கொள்கிறார் என்றும் தெரிவித்தே பெண் ஊழியர்கள் இவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

இந்த அலுவலகத்தில் பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் முன்னிலையில் தங்களைத் தகாதவார்த்தைகள மூலம் இந்தக் கணக்காளர் மானபங்கப்படுத்துகிறார் - என்றும் சில வேளைகளில் தம்மீது சீறிப்பாய்ந்து கொடூரமாக நடந்து கொள்கிறார் என்றும் இப்பெண் ஊழியர்கள் அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

இங்கு பணிபுரிகின்ற பெண் ஊழியர்கள் 13 பேரும் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றையும் அரச அதிபரிடம் கையளித்திருக்கின்றனர்.

இந்தக் கணக்காளர் இந்தச் செயலகத்தில் கடமையாற்றும்வரை தங்களால் இங்கு பணியாற்ற முடியாது என அரச அதிபரிடம் பெண்ஊழியர்கள் தெரிவித்து, இப்போதே இவரை இடம்மாற்றம் செய்யவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றனர்.

இவர்களது மன உளைச்சல்களை நன்கு புரிந்துகொண்ட அரச அதிபர், இக்கோரிக்கை தொடர்பில் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கத்தயாராக இருப்பதாகவும், எனினும், கணக்காளர் வழக்கு ஒன்றில் இடமாற்றத்தடை உத்தரவு பெற்றிருப்பதால் வழக்கு முடியும் வரை அவரை இடமாற்றம் செய்ய முடியாத நிலை இருக்கிறது எனவும் தெரிவித்தார். வழக்கு முடிந்ததும் இடம்மாற்றம் நடக்கும் என்றும் அரச அதிபர் உறுதியளித்தார். (ம)

# கனடாவில் நடந்த வாகன விபத்தில் தமிழ் தம்பதிகள் அதே இடத்தில் பலி!

## மற்றொரு விபத்தில் ஒரு குழந்தை மரணம்

கனடாவில் நடைபெற்ற இரண்டு வாகன விபத்துகளில் இலங்கையைச சேர்ந்த மூவர் கொல்லப்பட்டதோடு இருவர் காயமடைந்திருக்கின்றனர். இறந்தவர்களில் இருவர் தமிழ் தம்பதிகளாவர்.

ரொரன்ரோ, நோர்த்யோர்க் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பொன்னம்பலம் நமசிவாயம், மாதவி நமசிவாயம் தம்பதிகள் கொல்லப்பட்டனர்.

பொன்னம்பலம், கனடாவில் பாதுகாப்புத்துறை ஊழியராகக் கடமையாற்றியவர் எனவும் மாதவி மருத்துவ நிலையமொன்றில் தாதியாகப் பணியாற்றினார் எனவும் தெரிவிக்கப் பட்டது.

தனது மனைவியை காரில் இரவு 11 மணியளவில் பொன்னம்பலம் வேலைக்குக் கூட்டிச் செல்கையில் அவர்களது கார் மற்றொரு காருடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. இருவரும் சம்பவவிடத்திலேயே இறந்தனர்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் இலங்கையிலிருந்து கனடா சென்றனர்.

மற்ற விபத்து ஒட்டாவாவில் நடைபெற்றது. ஒரு காரும் பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதில் காரில் பயணம் செய்த இலங்கைத் தம்பதிகளின் ஒனறரை மாதக் குழந்தை மரணமானது. தம்பதிகள் இருவரும் பலத்த காயமடைந்தனர்.

# கொழும்பிலிருந்து மாத்தறை சென்ற பஸ்ஸில் பயணிகளிடம் ஏழு பேர் வழியில் கொள்ளை!

கொழும்பு,ஜுலை18

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த சொகுசு பஸ் ஒன்றின் பயணிகளிடம் வழியில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து புறப்பட்ட அந்த பஸ், கொஸ்கொடவை நெருங்கிய போது பஸ்ஸில் பயணம் செய்த கொள்ளையர்களில் ஒருவர் கைக்குண்டு, கத்தி சகிதம் சாரதியை நெருங்கி, பஸ்ஸை வேறு பாதையில் திசைதிருப்பச் செய்தார்.

ஊறுகஹ சந்திக்கு திசை திருப்பப்பட்ட பஸ்ஸில் இருந்த ஏனைய ஆறு கொள்ளையர்கள் பயணிகளின் பணம், நகைகள் கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றைக் கொள்ளையிட்டுள்ளனர்.

பின்னர், பொலீஸுக்குச் சொல்ல வேண்டாமென்று சாரதியைப் பயமுறுத திவிட்டு கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர். அவர்கள் கொழும்பிலிருந்தே பஸ்ஸில் பயணம் செய்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

# தெஹிவளை - கல்கிசை நகர முதல்வர் கொலை முயற்சியிலிருந்து தப்பினார்!

## காரில் செல்கையில் அவர் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு,ஜுலை18

தெஹிவளை-கல்கிசை மாநகர சபை மேயர் தனசிறி அமரதுங்க நேற்று முன்தினம் இரவு நடந்த துப்பாக்கிப் பிரயோகத்திலிருந்து உயிர்தப்பினார்.

நள்ளிரவு வேளை தனது மோட்டார் காரில் அவர் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிர் தப்பிய போதிலும் காரின் மீது ஐந்து துப்பாக்கிச் சூடுகள் விழுந்திருக்கின்றன.

தெஹிவளைப் பகுதியிலுள்ள அவரது வீட்டுக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த 'டொல்பின்' ரக வான் ஒன்றிலிருந்தோரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனக் கூறப்பட்டது.

இது குறித்து அவர் கொஹுவளைப் பொலீஸில் முறையிட்டிருக்கிறார். அப்பிரதேசத்தில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணங்களுக்கும் போதைப் பொருள் வியாபாரத்துக்கும் எதிரான தனது நடவடிக்கைகளினால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

### பட்டயக்கணக்காளர் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம்,ஜுலை18

இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனப்பரீட்சைகள், முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகள் நாளையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தொழில்சார் கற்கை நெறிகளை நடத்திவரும் IPAS நிறுவனத்தின் தொடர் முயற்சியின் விளைவாக இப்பரீட்சைகள் இங்கும் நடத்தப்படுவதாகக் கூறப்பட்டது. (ம-9)

### மின் தாக்கி சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜுலை18

பட்டம் எடுப்பதற்காக மின் கம்பத்தில் ஏறிய சிறுவன் ஒருவன் மின்சாரம் தாக்கிப் படுகாயம் அடைந்துள்ளான்.

மதவடி, கட்டுடையைச் சேர்ந்த இராசதுரை குணராசா(வயது16) என்ற சிறுவனே படுகாயமடைந்தான். அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டின் பின்புறம் உள்ள வயல் வெளியில் இச்சிறுவன் பட்டம் விட்டு விளையாடிக்கொண்டிருந்த போது பட்டம் மின் கம்பங்களில் மாட்டியுள்ளது. மின்கம்பத்தில் ஏறி அதனை எடுப்பதற்கு முயன்ற சமயம் சிறுவன் மின்சாரத்தால் தாக்குண்டுள்ளார்.

- என்று தெரிவிக்கப்பட்டது. (ம-சி)

## கழிவு நீர், குப்பை கூளங்கள் தேக்கம்!

# யாழ்.பல்கலைச் சுற்றாடலில் டெங்கு நுளம்பு பரவும் ஆபத்து

## உரிய தரப்புக்கள் பாராமுகம்!!

யாழ்ப்பாணம்,ஜுலை18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்கும் குமாரசாமி பெண்கள் விடுதிக்கும் இடைப்பட்ட சுமார் 200 மீற்றர் நீளமான ரயில் தண்டவாளப் பகுதியில் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இராமநாதன் வீதியிலுள்ள குமாரசாமி பெண்கள் விடுதியிலிருந்து வெளியேறும் கழிவு நீர் இந்தப் பகுதியிலேயே தேங்கி விடுகின்றது.

அத்துடன், ஏராளமான குப்பை கூளங்கள், கழிவுப் பொருள்கள் என்பவற்றை தினமும் பலர் இப்பகுதியில் கொண்டுவந்து கொட்டுகின்றனர். இதனால் அங்கு பெரும் துர்நாற்றமும் வீசுகின்றது.

அப்பகுதியில் கழிவு நீர் தேங்கி நிற்பதனாலும், குப்பை கூளங்கள் கொட்டப்படுவதனாலும் 'டெங்கு' காய்ச்சலைப் பரப்பக்கூடிய நுளம்புகள் அப்பகுதியில் பெருகுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக சுகாதாரப்பிரிவினர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இதனால்,பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் மற்றும் அப்பகுதியை அண்டிய பகுதிகளில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது.

டெங்கு காய்ச்சலை பரப்பக் கூடிய இத்தகைய நுளம்புகள் அவை உற்பத்தியாகும் இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை பறந்து சென்று நோயை ஏற்படுத்தக் கூடியவை என்றும்-

எனவே, இவற்றினால் ஏற்படக் கூடிய அபாயத்தை உணர்ந்து உடனடியாக அதற்குரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று யாழ்பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றுக்கு சுகாதாரப்பிரிவினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

எனினும், சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இது விடயத்தில் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. (எ-4)

### சாரணீய ஒன்றுகூடல்

யாழ்.மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சாரணர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-9)

### புலிகளால் சிறுவன் ஒப்படைப்பு

புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்வதற்கு வந்த 14 வயதுச் சிறுவன் தம்பிராஜா சுரனிராஜ் என்பவரை அம்பாறை மாவட்ட புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தருபிலன் அவரது பெற்றோரிடம் நேற்று ஒப்படைத்தார்.

சம்மாந்துறை, வீரமுனையைச் சேர்ந்த இச்சிறுவன் கண்காணிப்புக்குழு முன்னிலையிலேயே பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# திருட்டுக்களுடன் தொடர்புடைய நபர் யாழ்.பொலீஸாரால் கைது

## அவர் அங்கம் வகிக்கும் திருட்டுக் கும்பலை தேடி வேட்டை

யாழ்ப்பாணம்,ஜுலை18

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஒருவரை யாழ்.பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவருடன் சேர்ந்து ஒரு திருட்டுக் கும்பலே இயங்கி வந்ததாகக் கூறும் பொலீஸார், அவர்களைத் தேடி வலை விரித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

கல்வியங்காடு பகுதியில் வைத்து குறிப்பிட்ட நபரை நேற்றுமுன்தினம் தாம் கைதுசெய்ததாக பொலீஸார் கூறினர். எனினும், அவரது பெயர் விவரங்களை அவர்கள் வெளியிடவில்லை.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள பொருள்கள் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் திருடப்பட்ட பொருள்கள் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

ரீ.வி., டெக், வி.சி.டி.பிளேயர், 2சைக்கிள்கள், 5கைக்கடிகாரங்கள், செல்லிடப் தொலைபேசிக்கான 3 'சிம்காட்'கள்', 'அம்பிளிவயர்', பல புதிய சேலைகள் மற்றும் பெறுமதி வாய்ந்த தங்க நகைகள் என்பன கைப்பற்றப்பட்ட பொருள்களில் அடங்கியுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த நபருடன் தொடர்புடைய விசாரணைகள் தொடர்ந்து வருகின்றன. இவருடன் இணைந்து திருட்டுகளில் பங்கேற்றதாகக் கூறப்படும் குழு ஒன்றைத் தேடும் பணியிலும் யாழ்.பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே -

கைதுசெய்யப்பட்ட நபரை பொலீஸார் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ள நபருக்கு எதிராக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (10-5-9)

### பிள்ளைகளுக்கு விஷம் பருக்கி தானும் குடித்தாராம் தந்தை!

கொழும்பு,ஜுலை18

தந்தையினால் விஷம் பருக்கப்பட்டனர் எனக் கூறப்படும் இரு பிள்ளைகள் இறந்துள்ளனர். விஷம் குடித்த தந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மாத்தளை, அஸ்கிரியப் பகுதி தோட்டமொன்றில் நடைபெற்ற இச்சம்பவத்தில் ஐந்துவயது ஆண்பிள்ளையும், மூன்று வயது பெண்பிள்ளையுமே இறந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு தேநீரோடு விஷம் கலந்து இராமையா சிவானந்தம்(வயது24) என்னும் அந்தத் தந்தை பிள்ளைகளுக்கு பருக்கினார் எனக்கூறப்படுகிறது.

குடும்பத்தகராறே இதற்குக் காரணம் என்று பொலீஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

# கொரியர்களின் எல்லையில் பரஸ்பரம் துப்பாக்கிச் சமர்!

சியோல்,ஜூலை18

தென்கொரிய - வடகொரிய எல்லையில் இரு நாட்டுப்படையினரும் நேற்றுக் காலை பரஸ்பரம் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டனர். இச்சம்பவத்தில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லையாயினும், அங்கு தொடர்ந்து பதற்றம் நீடிக்கிறது.

1950 - 1953 காலப்பகுதியில் நடந்த கொரிய யுத்தத்தின் பின் ஏற்படுத்தப்பட்ட இராணுவ சூனியப் பிரதேசத்திலேயே மேற்படி சம்பவம் நடந்தது.

தென்கொரிய தலைநகர் சியோவில் இருந்து 70 கி.மீ வடக்காக உள்ள யொன்கொன் நகரிலேயே துப்பாக்கிச் சமர் நடந்துள்ளது.

வடகொரியர்களே முதலில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினர். நான்கு சுற்றுக்களாக இந்தத் தாக்குதல்கள் நடந்தன.

அதனையடுத்து, தென்கொரியாவில் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதும், தென்கொரிய படையினர் பதிலுக்கு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். 17 சுற்று இயந்திரத் துப்பாக்கி வேட்டுக்கள் தென்கொரியத் தரப்பில் இருந்து தீர்க்கப்பட்டன.

போர் நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் இராணுவ சூனியப் பிரதேசத்தில் இரு நாட்டுப்படையினரும் ஆயுதங்களின்றி ரோந்து செல்ல முடியும்.

சூனியப்பிரதேசத்தின் தெற்கு நோக்கி அமைந்துள்ள பகுதி அமெரிக்கா தலைமையிலான ஐ.நா கட்டளைப்பீடத்தின் மேற்பார்வையிலும் வடக்கு நோக்கி அமைந்துள்ள பகுதி வடகொரியாவின் மேற்பார்வையிலும் விடப்பட்டுள்ளன.

இந்த சூனியப்பிரதேசம் 310 கி.மீ. நீளமும் 5 கி.மீ. அகலமும் கொண்டது.

மேற்படி சம்பவம் பற்றி அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. ஆனால், இச்சம்பவம் பற்றி பரிசீலித்து வருவதாக பென்டகன் அதிகாரி ஒருவர் கூறினார்.

அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் இடையே அணுவாயுதத் திட்டம் தொடர்பாக முறுகல் நிலை ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் இரு கொரியர்களும் துப்பாக்கிச் சமர் புரிந்திருப்பது பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

தன்னிடம் அணுவாயுதத்திட்டம் இருப்பதாக வடகொரியா ஒப்புக் கொண்டதாக அமெரிக்க அதிகாரிகள், கடந்த ஒக்ரோபரில் கூறியதுடன், வடகொரியாவுக்கான எண்ணெய் வழங்கலையும் நிறுத்தியிருந்தனர்.

இதற்கு பதிலடியாக வடகொரியாவில் இருந்த ஐ.நா கண்காணிப்பாளரை அந்த நாடு வெளியேற்றியது. அத்துடன் அணுவாயுதத் தடை ஒப்பந்தத்தில் இருந்தும் விலகிக் கொண்டது.

இதனால், வடகொரியாவின் மீது அமெரிக்காவின் பார்வை அதிகரிக்க கொரிய குடாப்பகுதிக்கு நூற்றுக் கணக்கான அமெரிக்கப்ப படையினர் விரைந்தனர்.

இந்நிலையிலேயே மேற்படி துப்பாக்கிச் சமர் நடந்துள்ளது.

இதற்கிடையே -

அணு ஆயுதத் தகராறிற்கு சமாதானத் தீர்வு ஒன்றை எட்டும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்காவையும், வடகொரியாவையும் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் நேற்றுமுன்தினம் கேட்டுள்ளார்.

நிபந்தனைகளற்ற பேச்சுக்கு அமெரிக்கா வந்தால், தாம் அதற்குத் தயார் என்று வடகொரியா ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு, நிதி அமைச்சர்கள் ஹொங்கொங்கில் இராஜினாமா!

ஹொங்கொங்கில் இரண்டு அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சர் ரெஜீனா, நிதி அமைச்சர் லியுங் ஆகியோரே பதவிகளை இராஜினாமாச் செய்தவர்கள் ஆவர்.

ஹொங்கொங்கை வழிநடத்தி வரும் சீனா, சதி நடவடிக்கை முறியடிப்பு சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றும்படி ஹொங்கொங்கிற்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

ஆனால், ஹொங்கொங் மக்கள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதனால், ஹொங்கொங்கை ஆட்சிபுரியும் ருங் - சீ - ஹுவா சிக்கலில் மாட்டியுள்ள நிலையிலேயே, மேற்படி இரண்டு அமைச்சர்களும் இச்சட்டத்தை எதிர்க்கும் வகையில் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

நிதி அமைச்சர் லியுங் ஆடம்பரக் கார் ஒன்றை வாங்கினார் என்று எழுந்துள்ள ஊழல் விவகாரத்தால் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இவர்கள் இருவரின் இராஜினாமா குறித்து விளக்குவதற்காக ருங் - சீ - ஹுவா சீனாவிற்கு நாளை செல்லவுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் ரெஜினாவின் இராஜினாமாவுக்கு சதி நடவடிக்கை முறியடிப்பு சட்டமூலம் காரணமாயிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனாலும், அது தனிப்பட்ட காரணங்களால் தீர்மானிக்கப்பட்டது என்று ஹொங்கொங் அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை -

சதி நடவடிக்கை முறியடிப்பு சட்டமூலத்திற்கு எதிராக ஐந்து லட்சம் பேர் பங்குபற்றிய ஆர்ப்பாட்டம் ஒன்றும் அங்கு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ருங் இராஜினாமாச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

(ஒ)

# பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் அமெரிக்காவுக்கு விரைகிறார்

லண்டன்,ஜூலை18

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் அமெரிக்காவுக்கான திடீர் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஆபிரிக்க நாடான நைகரிலிருந்து யுரேனியத்தை ஈராக் இறக்குமதி செய்ததாக ஜனாதிபதி புஷ் கூறிய விடயம் சர்ச்சையில் உள்ளபோது பிளேயரின் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

லண்டன் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் மேற்படி விடயத்தை அமெரிக்க அரசுக்கு கூறியிருந்தனர். இதனால், இதுகுறித்து விளக்கம் அளிப்பதற்காக பிளேயர் அமெரிக்காவுக்கு விரைந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

# சந்தைக்குள் நுழைந்த கார் 8 பேரின் உயிரைப் பறித்தது!

## அமெரிக்காவில் சம்பவம்

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஜூலை18

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தின் சன்ரா மொனிகா புறநகர்ப்பகுதியில் வீதியோரமாக அமைந்திருந்த சந்தையொன்றினுள் படுவேகமாக நுழைந்த கார் எட்டுப்பேரின் உயிர்களைப் பறித்துள்ளது. உயிரிழந்தவர்களில் மூன்று வயதுச்சிறுமியும் அடங்குவாள்.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடந்த இந்த விபத்தில் 15 பேர் கடுங்காயங்களுக்கும், 20 பேர் சிறிய காயங்களுக்கும் உள்ளாகினர்.

86 வயது நிரம்பிய முதியவர் ஒருவரே காரைச் செலுத்தி வந்தார்.



விபத்துக்கு காரணமான கார்.

சந்தையின் ஒரு பகுதியை மறித்துப் போடப்பட்டிருந்த தடையைக் கண்டதும் பிரேக்கை மிதிப்பதற்குப் பதிலாக, விசை அழுத்தியை மிதித்தார். இதையடுத்து கார் படுவேகமாக சனநெரிசலுக்குள் புகுந்ததால் இந்த அனர்த்தம் நடந்தது.

'எனது 30 வருட பணிக்காலத்தில் இவ்வாறான ஒரு சம்பவத்தைக் காணவில்லை' என்று சன்ரா மொனிக்கா நகர பொலீஸ் அதிகாரி கூறியுள்ளார். காரை செலுத்தி வந்த முதியவர் மருத்துவரீதியான தகுதியீனங்களைப் பெற்றவர் அல்லர். இதனால், இச்சம்பவத்திற்காக அவருக்கெதிராக கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட உள்ளன.

கார் சந்தைக்குள் புகுந்ததும் அப்பகுதி இரத்தக்காடாகியது. காயமடைந்தவர்களுக்கு அந்த இடத்தில் வைத்தே சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. பொருள்களை வாங்க வந்தவர்களும், விற்றவர்களும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். ஹெலிகொப்டர்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டு கடுங்காயங்களுக்கு இலக்கானவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இச்சம்பவத்தை அடுத்து, 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாகனம் ஓட்டுவதாயின் அதற்குரிய பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று கலிபோர்னியாவைச் சேர்ந்த செனட் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பலஸ்தீனர்களின் நிர்வாகத்துக்கு அமெரிக்கா நிதியுதவி வழங்குகிறது!

ஜெருசலேம்,ஜூலை18

பிரதமர் மஹ்மூட் அபாஸ் தலைமையிலான பலஸ்தீன நிர்வாகத்துக்கு அமெரிக்கா 2 கோடி அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது. பலஸ்தீன அரசியல் நிர்வாகத்துக்கு அமெரிக்கா நேரடியாக உதவி வழங்குவது இதுவே முதற்றடவை என்று கூறப்படுகிறது.

பலஸ்தீனத்தின் புதிய பிரதமர் தலைமையிலான நிர்வாகம் மீது அமெரிக்க அரசு கொண்டுள்ள நம்பிக்கையையே இந்த நேரடி உதவி பிரதிபலிப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸாவில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ வைபவத்தில் அமெரிக்க உதவிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதில் அமெரிக்கப் பிரதிநிதி ஜெனரல் ஜெவ்ரி .'.பெல்ட்மான் மற்றும் பலஸ்தீன நிதி அமைச்சர் சலாம் பயட் ஆகியோர் கைச்சாத்திட்டனர். சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் காஸா மற்றும் மேற்குக் கரைக்கான பிராந்திய இயக்குநர் லரி கர்பர் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது. இந்த உதவி மூலம் கிடைக்கும் தொகை, கடந்த மூன்றாண்டுகளில் பாதிப்படைந்த வீதிகளைப் புனரமைக்கவும், குடி தண்ணீர் விநியோகத்தைச் சீர்செய்யவும் பயன்படுத்தப்படும்.

கடந்த காலங்களில் பலஸ்தீனத்துக்கான தனது உதவிகளை மூன்றாவது தரப்பின் ஊடாகவே அமெரிக்கா வழங்கி வந்தது.

அமெரிக்கா வழங்கும் நிதி, இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களுக்கு மறைமுகமாக பலஸ்தீன நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் என்ற அச்சம் காரணமாக, நேரடி உதவிகளை அமெரிக்கா வழங்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா அளித்துள்ள இந்தப் பெருந்தொகை நிதி உதவி பலஸ்தீனர்கள் மத்தியில் பிரதமர் முகமட் அப்பாஸ் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்ள உதவும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

(ஒ)

### ஆயுர்வேதக் கண்காட்சி

ஆயுர்வேத மருத்துவத்துறையைப் பிரபல்யப்படுத்தும் நோக்கத்தில், ஆயுர்வேத மருத்துவக் கண்காட்சி லண்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது. 15 நாள்கள் நடைபெறும் இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்குகளுக்கு வருவோருக்கு ஆயுர்வேதம் பற்றிய ஏராளமான தகவல்கள் வழங்கப்படும்.

பிரிட்டனில் உள்ள 'கிரேட் பிரிட்டன்' ஆயுர்வேத நிறுவனத்தின் தலைவர் கோபி வாரியார், இக்கண்காட்சியை லண்டனில் உள்ள பாரதிய வித்யாபவன் அரங்கில் தொடக்கிவைத்தார்.



பலஸ்தீனர்களுக்கான அமெரிக்க உதவி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது.

# ஈராக்கில் கெரில்லாத் தாக்குதல்களினால் அமெரிக்கப் படையினர் மத்தியில் விரக்தி!

பக்தாத்,ஜூலை18

தம்மீது ஈராக்கியர்கள் நடத்தி வரும் கெரில்லாத் தாக்குதல்களினால் அமெரிக்கப் படையினர் விரக்தியடைந்துள்ளனர்.

ஈராக்கியர்களின் அதிரடித் தாக்குதல்களினால் அமெரிக்கப்படையினர் புலம்பத் தொடங்கியுள்ளனர். 'அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் இங்குவந்தால் அவரை இராஜினாமா செய்யும்படி நாம் கேட்போம்' என்று பாலுஜா நகரில் உள்ள அமெரிக்கப்படை வீரர் ஒருவர் ஆதங்கப்பட்டுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்க படையினருக்கெதிரான தாக்குதல்கள் அசல் கெரில்லா பாணித் தாக்குதல்களே என்று ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் இதனை ஏற்றுக்கொள்வதற்கு பின்னடித்துள்ளது. சதாம் ஹுசைனின் பாத் கட்சி ஆதரவாளர்களின் அங்கொன்றும் இங்கொன்றுமான தாக்குதல்களே ஈராக்கில் நடக்கின்றன என்று பென்டகன் கூறியுள்ளது.

இதுகுறித்து ஈராக்கிலுள்ள ஜெனரல் ஜோன் அபிசெய்ட் கூறுகையில் இராணுவ அர்த்தத்தில் கூறுவதாயின் இதனை ஒரு கெரில்லா தாக்குதல் என்று கூறுவதே பொருத்தமானது -- எனத்தெரிவித்தார்.

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் தமது விரக்தி பற்றியும் தமக்கெதிரான தாக்குதல்கள் அதிகரித்து வருவது பற்றியும் அச்சம் வெளியிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இராணுவ அதிகாரியின் மேற்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் உள்ள தற்போதைய நிலைமைகள் அமெரிக்க மக்களிடம் பெரும் ஏக்கத்தைத் தூண்டியுள்ளது. ஈராக்கில் கெரில்லாத் தாக்குதல்கள் அதிகரிக்கும் பட்சத்தில் ஜனாதிபதி புஷ் நிர்வாகத்திற்கு உண்மையான அரசியற் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே -

ஈராக்கில் நேற்று நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்; இருவர் காயமடைந்தனர். அத்துடன், பக்தாத் விமான நிலையத்தில் தரையிறங்கிய சரக்கு விமானம் மீது ஏவுகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

மேற்கு ஈராக்கில் உள்ள ஹடித்தா நகரின் அமெரிக்க ஆதரவாளரான மேயரும் அவரது மகனும் நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

(ஒ)

# அமெரிக்காவிடம் கையேந்துகிறது ஐ.நா.

ஐ.நா.தலைமையகக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்காக 10 ஆயிரம் கோடி ரூபாவை வட்டியில்லா கடனாக வழங்கும்படி கேட்டு அமெரிக்காவிடம் ஐ.நா.சபை கையேந்தி நிற்கிறது.

ஐ.நா.சபைக்கான தலைமை அலுவலகம், 50 ஆண்டுகளுக்கு முன்பு நியூயோர்க் நகரில் கட்டப்பட்டது. இதைக்கட்டுவதற்கு, அப்போது 650 கோடி ரூபாவை வட்டி இல்லாக் கடனாக அமெரிக்கா கொடுத்தது.

39 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தை, 11 நாடுகளின் கட்டடக் கலைஞர்கள் வடிவமைத்தனர். இதில் 2 ஆயிரத்து 450 ஜன்னல்கள் உள்ளன.

1952 ஆம் ஆண்டுதான் கட்டடப் பணிகள் நிறைவு பெற்று, கட்டடம் முழுமை அடைந்தது. இப்போது இது பழைமையானதாகிவிட்டது. கண்ணாடியால் கட்டப்பட்ட இதன் கூரையின் பல இடங்களில் ஓட்டைகள் ஏற்பட்டு, மழைபெய்தால் தண்ணீர் ஒழுகுகிறது.

தீ விபத்து ஏற்பட்டால், அதை அணைப்பதற்கு கருவிகள் இல்லை. வெப்பம் மற்றும் குளுமைப்படுத்தும் கருவிகள் சரியாகச் செயல்படவில்லை.

எனவே, இந்தக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்கு, 10 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படுகிறது. இந்தத் தொகையை வட்டியில்லாக் கடனாகத் தரும்படி அமெரிக்காவை ஐ.நா. கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. சபை அதிகாரிகள் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

(ஒ)

## உள்ளூராட்சி வார கலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபையும், சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் செ.செல்வரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்வார். (எ-4)

## தாதிமார் சம்பள நிலுவை அடுத்த மாதம் கிடைக்கும்

கொழும்பு,ஜூலை18

அரச மருத்துவ தாதியர்களுக்கு கடந்த 1997 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவையை அடுத்த மாதம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கென 30 கோடியே 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஐக்கிய தாதிமார் சங்கத்தின் தலைவர் முத்தெட்டுவே ஆனந்த தேரர் கடந்த செவ்வாயன்று நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வததையுடன் நடத்திய பேச்சிலேயே இந்த இணக்கம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-4)

## கடல்வள தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை18

கடல்வள தொழில்நுட்ப பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு, இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் யாழ். பல்கலைக் கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த இருநாள் செயலமர்வில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்து ஆசிரியர்களாகக் கடமையாற்றும் அனைவரையும் தவறாது கலந்துகொளளும்படி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கே.சித்திரவடிவேலு கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## வைத்தியர் இன்றி முதியோர் சிரமம்

தென்மராட்சி,ஜூலை18

கைதடி முதியோர் இல்லத்தில் நிரந்தர டாக்டர் இல்லாததால் அங்கு தங்கியுள்ள முதியோர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த முதியோர் இல்லத்தில் 200இற்கு மேற்பட்ட முதியோர்கள் தங்கியுள்ளனர். இங்கு நிரந்தர டாக்டர் இல்லாததால் கைதடி மத்திய மருந்தக டாக்டரே இதுவரை காலமும் முதியோர் இல்லத்திற்குச் சென்று சிகிச்சையளித்து வந்தார்.

தற்போது மத்திய மருந்தகம் வாரத்தில் மூன்று தினங்களே இயங்குகிறது. இந்நிலையில், அந்த முதியோர் இல்லத்திற்குச் சென்று சிகிச்சையளிப்பதில்லை. இதனால் முதியோர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஏ-9-117)


### விற்பனைக்கு உண்டு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14" 16" ஆகியவையும், ரில்லர்களும், வெல்டிங் பிளான்ட் (ட்ரான்ஸ்போமர்), அலுமினிய கட்டிங் மெசின் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கி.சுதாகரன்,
No.20, 2ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். T.P:-0777-295998
(20310) (21-14-16)


## ஒப்பந்த அடிப்படையில் சுண்ணாம்பு கட்டடம் இடித்தலுக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

பருத்தித்துறை புனித தோமையார் ஆலய பழைய சுண்ணாம்புக் கட்டடம் ஒப்பந்த அடிப்படையில் இடிப்பதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

மேற்படி கட்டடத்தைப் பார்வையிட்டு செலவு மதிப்பீட்டை 01.08.2003 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ *பங்குத் தந்தை, பருத்தித்துறை* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டடம் இடித்தல்" என்று குறிப்பிடவும். குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் இடித்து முடிக்க வேண்டும்.

*புனித தோமையார் ஆலய நிர்வாக சபை,*
(C/29004)(21-14-16) பருத்தித்துறை.

## நினைவு ஊற்று



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 18 |
| ஜூ | டி |
| 01 | 07 |
| ஜூ | டி |
| 1942 | 2000 |

### அமரர் வேலுப்பிள்ளை கனகரட்ணம்

(கனெக்ஸ் - A.D.P. பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

நீண்ட தூரம் பயணித்து விட்ட
எம் அன்புருவமே!
உம் -
அலுவலக இருப்பிடமும் - நீர்
அமர்ந்து தூங்கும் இருப்பிடமும்
நினைவுகளை மீட்டியபடி இன்னும்.........!
புதிய கிணற்று நீரில் கூட
நீரின் ஊற்றாய் நீரே தான்.....!
எங்கள் நினைவுகளில் நீரேதான்!
அன்புக்கு அப்பாவாய்
ஆசைக்கு ஓர் பப்பியாவாய்
எல்லோர்க்கும் இனியவராய்
நோயை வென்று வாழ்ந்தீர்!
காலனவன் உமை வென்ற
ஆண்டுகள் மூன்று.........!!!
ஆனாலும் - எம்முடன்
இன்றும் வாழ்கின்றீர்
இனிய நினைவுகளாய்.......!
அலுவலகப் பையும்
இடுப்பினிலே கையும் - உம்
கண்ணாடியும் சந்தனப்பொட்டும்
கண்முன்னே........கண்முன்னே....
கண்களை நனைக்கும்
ஈர நினைவுகளாய் - நீர்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்.....
எம்முடன் என்றும்!

உங்கள்:
கனடா. (20364)(21-14-16) திலீபன். மேகலா. கோகுலன். அர்ச்சனா.


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No:-6382)AR/PR/No.-228

யாழ்-மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி. இல. -021-222-2567
(ரி-28666)



## STUDY IN RUSSIA

Through Higher Education Ministry of Russia

Specialities

- Medicine
- Dentistry
- Computer Science
- Civil Aviation, Aircraft Engineering
- Ship Engineering
- Tele communications
- Medical postgraduate studies, Ph.D.
- Medium - English/Russian

For more details you can contact us at

**North Lanka Institute of Information Technology [NLIIT]**

☆ Main street, Manipay. ☆ Main street, Chankanai.
T.P.- 0777 - 734270 & 074 -513956
0776 - 125383 & 075 - 538999
(JAFFNA) (COLOMBO)

* Education in Russia is the right choice.
(20383)


## நாதஸ்வர கோபுரம்



அழமிகு நாதஸ்வரத்தில் பரந்த லயம் ஏழு ஸ்வரங்களில் நெஞ்சை அள்ளும் மிஞ்சு சுரவேக ஒலி புல்லரிக்கும் வீசும் அண்ணனின் சுவாசம் அழகொடு தாள லயம் சுருதி நாத சுகம் விஞ்சிடத்தரும் நாதஸ்வர ஓசையுடன் பல்லாண்டு இணைந்து தவில் இசைக்கும் பாக்கியம் கிடைத்தது. நல்லை முருகன் அருளோ.

தவில் வித்வான் சுநல்லூர்
(20391) (21-25-14-16) ந.முருகானந்தம் குடும்பத்தினர்.

## கலாசூரிக்கு என் கண்ணீர்ப் புஷ்பம்



காலன் அழித்தாலும் காலத்தால் என்றும் அழியாத இசை அரசு

### அமரர் N.K. பத்மநாதன்

அவர்களுக்கு வாழ்ந்த காலத்தில் என்னோடு பழகிய நினைவலைகள் என்றும் பசுமை நீங்காது என் நெஞ்சில் நிலைத்திருக்கும். ஆத்ம சாந்திபெற நல்லைக் குமரன் அருள் வேண்டி நிற்கும்:

சிவப்பிரம்மஸ்ரீ ராம் கேங்காதரக்குருக்கள்
மயிலைப்பா, சாரதாபீடம்.
(20396) (21-25-14-16)




உலகப் புகழ் பெற்ற L.G
சலவை இயந்திரங்கள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-28657)



## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கடல்' 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுகொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

*இல. 212, கே.கே.எஸ்.வீதி,* *யாழ்ப்பாணம்.* T.P.021-222 5542

(C/28764) (21/14-16)

உதயன்

# உளவுச் சேவைக்குள் அமெரிக்க ஊடுருவல்!

நாட்டின் உளவுப் பிரிவுகள், சேவைகள் தொடர்பான முக்கிய கூட்டங்களில் அமெரிக்க அதிகாரி ஒருவர் பங்குபற்றி வருகின்றார் என்பது பற்றிய தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விவகாரம் குறித்து ஜனாதிபதி குமாரதுங்க தமது எதிர்ப்பையும், சீற்றத்தையும், விசனத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

நாட்டின் அனைத்து உளவுச்சேவைகளையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்துவதற்கான இரண்டு கூட்டங்கள் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபரான மெரில் குணரட்ண தலைமையில் அண்மையில் இடம்பெற்றன. இந்தக் கூட்டங்களில் அமெரிக்க அதிகாரி ஒருவரும் பங்குபற்றியிருக்கின்றார். அது குறித்தே ஜனாதிபதி தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றார்.

இவ்விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவையும் மெரில் குணரட்ணவையும் அழைத்து, தமது எதிர்ப்பை அவர்களிடம் ஜனாதிபதி தெரிவித்தார் என ஜனாதிபதியின் உதவியாளர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

"நாட்டின் உளவுத் தகவல்களை ஒருங்கிணைப்பதற்கான விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது. அது தொடர்பாக அமெரிக்க உதவியைப் பெறவுள்ளோம். அதற்காகவே சம்பந்தப்பட்ட அதிகாரி மேற்படி கூட்டங்களில் கலந்துகொண்டு வருகின்றார்" - என பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராலும் உளவுப்பிரிவு அதிகாரியினாலும் ஜனாதிபதிக்குச் சமாதானம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், நாட்டின் உளவுப் பிரிவின் சுயாதீனத் தன்மை பேணப்படவேண்டும். இத்தகைய முக்கிய கூட்டங்களில் வெளிநாட்டவரின் பிரசன்னம் அதற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

எனினும், ஜனாதிபதி குமாரதுங்கவின் இக் கருத்தை பிரதமர் ரணிலின் அரசு கவனத்தில் எடுக்குமா என்பது கேள்விக்குறியே.

ஏனெனில், உளவுச்சேவைகள் அனைத்தும் அரசின் கீழும் அமைச்சரவையின் கீழுமே செயற்படுகின்றன என அரசு கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், உளவுச்சேவைகள் தொடர்பான சகல நியமனங்களையும் அரசே மேற்கொண்டும் வருகின்றது.

இந்நிலையில், இந்த விவகாரம் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல என்பதில் அரசு திட்டவட்டமாக உள்ளது. எனவே, இது விடயத்தில் ஜனாதிபதியின் எதிர்ப்போ, விசனமோ அரசின் கவனத்தில் ஏறாது என்றே தெரிகின்றது.

எது எப்படியோ, பிரதமர் ரணிலின் அரசு அமெரிக்க வலைக்குள் கொஞ்சம் கொஞ்சமாக விழ்ந்து வருகின்றது என்பதற்கு இத்தகைய சம்பவங்கள் நல்ல சான்றுகள்.

அமைதிப்பேச்சுக்கள், தீர்வு முயற்சிகள், புரிந்துணர்வு நடவடிக்கைகள் என்று ஒருபுறம் சமாதான வேட்மிடும் இலங்கை அரசு, மறுபுறத்தில் தனது இராணுவ ஆதிக்க வலுவை அபிவிருத்திசெய்து, விஸ்தரித்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஆயுத வழியில் - இராணுவ ரீதியில் - அடக்குவதற்கும் கங்கணம் கட்டித் தயாராகி வருகின்றது.

அந்தத் திட்டத்தின் - செயற்பாட்டின் - ஒரு கட்டமே, தனது இராணுவ நோக்கங்களுக்கு அமெரிக்க வல்லாதிக்கத்தின் முழு உதவியைப் பெற்றுக்கொள்ளும் அரசின் இத்தகைய நடவடிக்கையாகும்.

விசேடமான கூட்டு இராணுவப் பயிற்சிகள் கூடற் படைக்கலங்கள் மற்றும் ஆயுதத் தளபாடங்களை உதவியாகப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற - அமெரிக்காவின் யுத்த ரீதியான ஒத்துழைப்பின் ஓர் அங்கமே நாட்டின் தேசிய உளவுச் சேவைகளுடன் அமெரிக்கத் தரப்பையும் இணைத்துக் கொள்ளும் இம்முயற்சி என்று கூறினால் அது தவறாகாது.

சர்வதேச இராணுவ வல்லாதிக்க சக்திக்கு நமது நாட்டை அடகு வைக்கும் இந்தச் செயற்பாடு, நாட்டைமீள முடியாத சர்வதேசச் சிக்கலில் கொண்டுபோய் மாட்டிவிடும்; ஆபத்துக்குள் தள்ளிவிடும்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக தேசிய சக்திகள் கிளர்ந்தெழுவது காலத்தின் கட்டாயமாகும். அந்தச் சக்திகள் விழித்துக்கொள்ளுமா?

# பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை விட படைப் பாதுகாப்பே இங்கு முக்கியமாம்!

## அருட்திரு. சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்தைவிட இராணுவத்தினரின் பாதுகாப்பே முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. இது வேதனைக்குரியது.

- இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பஸ்தியன் ஹோட்டலில் நடைபெற்ற கொழும்பு மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் வட பிராந்தியக் குழுவிற்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு.சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் விசனம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

"புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் இருந்ததைப் போன்று இப்போது குடாநாட்டில் படிப்படியாக இராணுவக் கெடுபிடிகள் மீண்டும் அதிகரித்து வருகின்றன. எமது மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தில் இப்போது பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாகக் கரையோரப்பகுதிகளில் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு இராணுவம் தடையாக இருந்து வருகின்றது. இந்தநிலை மாற்றப்படவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் இருந்ததைவிட தற்போது உயர் பாதுகாப்பு வலயங்களின் பரப்பளவு மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. இதனால் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் வாழமுடியாமலும் அடிப்படை வசதிகளற்ற நிலையிலும் உள்ளனர்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை பொதுமக்களின் இயல்பு வாழ்வைவிட இராணுவத்தினரின் பாதுகாப்புத்தான் முக்கியமானதொன்றாகவுள்ளது. இராணுவத்தினரின் செயற்பாடுகளும் திட்டங்களும் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

யாழ்.குடாநாட்டுக்கு விஜயஞ்செய்து இங்குள்ள உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட்ட இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் சதீஷ் நம்பியார் அறிக்கை ஒன்றை அரசுக்குச் சமர்ப்பித்திருந்தார். அவ்வறிக்கையிலும் அவர் இராணுவப் பாதுகாப்பையே முக்கிய விடயமாகக் குறிப்பிட்டுள்ளார் - என்றார் அடிகளார்.

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் அத்தியாவசியத் தேவைகள், நலன்புரி முகாம்களில் உள்ள மக்களின் நிலை, கண்ணிவெடியகற்றல் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் டாக்டர் வ.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், உள் ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கொழும்பிலுள்ள சர்வதேச அரசசார்பற்ற மற்றும் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ஒ-8)

### விண்ணப்பப்படிவங்கள் இல்லாததால்

## ஆரம்ப முன்பள்ளி கற்கைநெறியை ஆரம்பிக்க முடியாத நிலைமை

### திறந்த பல்கலை இணைப்பாளர் கவலை

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் 'ஆரம்பமுன்பள்ளி' கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கு சுமார் ஆயிரத்து 200 மாணவர்கள் தயாராகவுள்ளனர். ஆனால், அவர்களுக்குரிய விண்ணப்பப்படிவங்கள் தலைமையகத்திலிருந்து அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் அவர்கள் கற்கைநெறியில் இணைந்துகொள்ளமுடியவில்லை.

- இவ்வாறு திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இணைப்பாளர் ச.ஆ.ஞானேந்திரன் கவலை தெரிவித்தார்.

இதேவேளை -

'உயர்தர முன்பள்ளி' கற்கை நெறிக்கான ஒரு தொகுதி விண்ணப்பப்படிவங்கள் தலைமையகத்தால் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

'ஆரம்ப முன்பள்ளி' கற்கை நெறியைப் பூர்த்திசெய்த ஒருவரே 'உயர்தர முன்பள்ளி' கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என்பது திறந்த பல்கலைக்கழக நிபந்தனையாகும்.

இந்தநிலையில், ஆரம்ப முன்பள்ளி கற்கை நெறியை நடத்துவதற்குரிய விண்ணப்பப்படிவங்களை அனுப்பாமல் 'உயர்தர முன்பள்ளி' கற்கைநெறிக்குரிய விண்ணப்பப்படிவங்களை அனுப்பியிருப்பதால் எந்தப் பயனும் இல்லை என்றும் இணைப்பாளர் ஞானேந்திரன் மேலும் தெரிவித்தார்.

(ஒ-4-85)

## கிளிநொச்சியில் மசூதி புனரமைப்பு

கிளிநொச்சி,ஜூலை18

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள குளத்தடி மசூதி தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாக அதன் மௌலவி ஹனீபா தெரிவித்துள்ளார்.

கடந்த 13 வருடங்களுக்கு மேலாக வழிபாடுகள் எதுவுமின்றிச் சேதமடைந்த நிலையில் இருந்த இந்த மசூதியைப் புனரமைப்பதன் மூலம், தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துவரும் முஸ்லிம்கள் வழிபாட்டில் ஈடுபட முடிவதுடன் தமது மதச் சடங்குகளையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார்.

இப்புனரமைப்புப் பணிகளுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரும், நிர்வாக சேவையினரும் பூரண ஒத்துழைப்பு வழங்கிவருவதாகவும் மௌலவி மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10-78)

## மல்லாகம் நீதிமன்ற வளாகத்தில் ஆயுதங்கள் வைத்திருந்தவர் கைது!

வலி.வடக்கு,ஜூலை18

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ஆயுதங்களுடன் நடமாடியதாகக் கூறப்படுபவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். சங்கானையைச் சேர்ந்த குமரகுருநாதன் பிரணவன் (வயது 23) என்ற இளைஞரே கைதானவராவார்.

பெண் கடத்தல் தொடர்பான வழக்கொன்றில் ஆஜராவதற்காக நீதிமன்றத்துக்கு இந்த இளைஞர் வந்திருந்ததாகவும் -

அப்போது சைக்கிள் செயின், கத்தி போன்றவற்றை உடைக்குள் இந்த இளைஞர் மறைத்து எடுத்து வந்திருந்ததை நீதிமன்ற பொலீஸாரான சார்ஜன்ட் எச்.ஜி.புஸ்பகுமார, க.கணேஸ் ஆகியோர் கண்டுபிடித்துக் கைப்பற்றியதாகவும் - கூறப்படுகிறது.

இந்த விடயத்தை பொலீஸார் மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவனின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதனையடுத்து மேற்படி இளைஞரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட இளைஞரை பிணையில் விடுவிக்கக்கோரி சட்டத்தரணிமூலம் மனுதாக்கல் செய்யப்பட்டபோதும் நீதிமன்றினால் பிணைக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (ஒ-86)

**நாளை**

ஆடி 03
சனிக்கிழமை
(19.07.2003)
திதி : ஷஷ்டி
பின்னிரவு 12.27 வரை.
நட்சத்திரம : உத்தரட்டாதி
பின்னிரவு 4.38வரை.
சுபநேரம் : 3.01 - 4.31
ராகுகாலம் : 9.01- 10.31
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

50 நண்பர்களைப் பெற்றிருப்பதால் கிடைக்கும் பயன் ஒரு விரோதியைப் பெறுவதால் இழக்கப்படும்.

## தொழில்நுட்பவியலாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

வலிகாமம் தெற்கு,ஜூலை18

மருந்தாளர்கள், வைத்திய இரசாயனகூட தொழில்நுட்பவியலாளர்கள், பௌதிக சிகிச்சையாளர்கள்,எக்ஸ் -ரே தொழிற சிகிச்சையாளர்கள், கண் தொழில்நுட்பவியலாளர்கள், பல் தொழில்நுட்பவியலாளர்கள், பாடசாலை பல் சிகிச்சையாளர்கள், பொதுசன சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவைப் பெண்கள், பொதுசன சுகாதார இரசாயனகூடவியலாளர்கள், மின்சார இதயத் துடிப்புப் பதிவாளர்கள், மின்சார மூளை இயக்கப் பதிவாளர்கள் போன்ற பல்வேறு பதவிகளுக்கு சுகாதார போஷனை நலநோன்பு அமைச்சினால் உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலேயே மேற்படி பதவிகளுக்கான ஆளணியினர் சேர்த்துக் காள்ளப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-152)

## சமாதான செயன்முறை பற்றி சனியன்று கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஜூலை18

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு ஏற்பாடு செய்துள்ள சமாதான செயன்முறை பற்றிய கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாதானத்துக்காக மக்களையும், அரச குழுக்களையும் ஒன்று திரட்டி அவர்களின் அறிவை வளர்ப்பதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கம் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பாக பெவ்ரால் இயக்கம் மாகாண, தேசிய மட்டத்தில் நடத்திவரும் கலந்துரையாடல்தொடரில் ஒன்றே இந்தக் கலந்துரையாடல் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் மட்டுமே இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(எ-86)

## அறநெறி பாடசாலை மாணவருக்கு ஒக்ரோபரில் இறுதிப் பரீட்சை

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வலி.தெற்கு, ஜூலை18

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்துசமய இறுதிப்பரீட்சை எதிர்வரும் ஒகரோபர் மாதத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் தமிழ்மொழிமூலம் நடத்தப்படவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அறநெறிப்பாடசாலைகளில் தரம் II இல் கல்வி கற்பவர்களும், கற்றவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

முதல்முறை இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் இலவசமாகவும், இரண்டாம் முறையாகத் தோற்றுபவர்கள் ஐம்பது ரூபா பணம் செலுத்தியும் தத்தம் அறநெறிப் பாடசாலைகளினூடாக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், அதிகூடிய புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் மேற்படி பரீட்சைகள் நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்பாக 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை - பத்திரமுல்லை' என்ற விலாசத்துக்குப் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

தகைமையுடையவர்கள் பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள், பிற தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் 2003-07-25ஆம் நாள் நேரில் வருகைதரவும்.

*பணிநிலை* : எழுதுநர்

*கல்வித் தகைமை*: க.பொ.த.(உ/த) வணிகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**நடுவப்பணியகம்,**
**ஆயப்பகுதி,**
**கிளிநொச்சி.**

(C/29002) (21-14)

## 25 ஆவது வருட நினைவலைகள்

அறிவுச் செல்வம்! அன்புச்செல்வம்!!
அழியா நிலைபெற்ற ஆருயிர்ச் செல்வம்!!!



| தாயின் மடியில் | முருகன் அடியில |
|---|---|
| 16 - 09 - 1970 | 23 - 07 - 1978 |

### அமரர் மகேசன் திருக்குமார்

எங்களது அன்புக் களஞ்சியமே! நீங்கள்
திருமுருகனுடன் திருவுலா சென்று
இன்று இருபத்தைந்து வருடங்களாகியும்
உங்கள் ஒளி மிளிரும் உருவமும்
தேன்மொழியும் எங்கள் மனதை விட்டகலவில்லை.

பிரிவால்துயருறும்:
- அம்மா, அப்பா, அக்கா, பபா, அருள்பெரியப்பா.

*6, இராணி வீதி,*
*நல்லூர்.*

(20355) (21-14)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1953 - 10 - 30 | 2000 - 07 - 18 |

### அமரர் திரு.கந்தசாமி தர்மேசன்

(வலிகாமம் கல்விவலயத் திட்டமிடல் உதவியாளர், காங்கேசன்துறை மாவட்டச் சாரண உதவி ஆணையாளர்)

ஞாலம் போற்ற வாழுங் கால் உமை
ஞமலி வடிவிற் காலன் கவர்ந்து
மூவாண்டுகள் சென்றிடினும் நிதம்
மறவாது அஞ்சலித்து வணங்குகின்றோம்!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
முத்தரன்கள்.

*"தரன் இல்லம்"*
*தேவாலய வீதி,*
*நீளாய், சுழிபுரம்.*

(20388) (21-14)



# இராணுவ முகாம் சிற்றூழியராக இருந்து தொழிலதிபரான ஜயலத்

## நேர்மையும் தாராளமும் வாழ்வில் உயர்ச்சியைத் தரும் என்கிறார் 'ஜயபூமி' அதிபர்

நாவலப்பிட்டி நகரில் 'ஜயபூமி' என்னும் நிறுவனத்தின் பெயரில் பல்வேறு வர்த்தகங்களை வெற்றிகரமாக நடத்திவருகிறார் ஜயலத் பிரேமலால்.

1983ஆம் ஆண்டு இவர் அநுராதபுரம் இராணுவ முகாமில் சிற்றூழியராக இணைந்தார். பின்னர் அந்த இராணுவ முகாமில் சிற்றுண்டி நிலையத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

சுமார் ஐந்து வருடங்கள் அந்த சிற்றுண்டிச்சாலையை நடத்தி வர்த்தக நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கான முதலீட்டைத் தேடிக்கொண்டார்.

மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தந்தையின் மறைவுக்குப்பின் சிறுவயதிலேயே தாயுடன் நாவலப்பிட்டியில் குடியேறினார்.

1990ஆம் ஆண்டு நாவலப்பிட்டி நகரில் சில்லறைக் கடையொன்றை ஆரம்பித்த இவர், இன்று நாவலப்பிட்டி நகரில் ஒரு சினிமா தியேட்டருக்கும் இரண்டு சிற்றுண்டிச்சாலைகளுக்கும் உரிமையாளராக இருக்கிறார்.

நாவலப்பிட்டி நகரில் மஞ்சிபிஸ்கட் விநியோகத்தையும் இவர் மேற்கொள்கின்றார்.

விரைவில் கம்பளை நகரில் சிற்றுண்டிச்சாலைகளுடன் கூடிய சினிமா தியேட்டர் ஒன்றையும் நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளார்.

இவரது வர்த்தகம் வளர்ச்சியடைய உதவிய செலான் வங்கியின் நாவலப்பிட்டிக்கிளை முகாமையாளரும் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

*கேள்வி:* இன்று வியாபாரத் துறையில் நீங்கள் வளர்ச்சியடைந்துள்ளீர்கள். நீங்கள் கடந்து வந்த பாதை குறித்து விளக்குவீர்களா?

*பதில்:* ஆரம்பத்தில் நான் அநுராதபுரம் இராணுவ முகாமில் சிற்றுண்டிச்சாலை நடத்தினேன். ஐந்து வருடங்களின் பின்னர் 1990ஆம் ஆண்டு நாவலப்பிட்டி நகரில் சில்லறைக்கடையொன்றை ஆரம்பித்தேன். எனது வளர்ச்சிக்கு செலான் வங்கி பெரிதும் உதவியது.

*கேள்வி:* வியாபாரி என்ற வகையில் நீங்கள் சந்தித்த தோல்விகள் இருக்கின்றனவா?

*பதில்:* ஆரம்பத்தில் நான் வியாபாரத்தை மேம்படுத்த மிகவும் பிரயததனம் எடுத்துக்கொண்டேன். எனக்கு உதவிசெய்ய எவரும் இருக்கவில்லை. சிறிதுகாலத்தில் மேலும் ஒரு சில்லறைக் கடையை ஆரம்பித்தேன். பணக் கஷ்டம் காரணமாக அந்த மூடும் நிலை ஏற்பட்டது. அதன்பின்னர் முதலில் ஆரம்பித்த சில்லறைக்கடை படிப்படியாக முன்னேற்றம் கண்டது. இந்தவேளையில், செலான் வங்கி எனக்கு உதவி செய்ய முன்வந்தது. அதேநேரம் ஒரு சிற்றுண்டி நிலையம விற்பனைக்கு வந்தது. அதை நான் எனது பொறுப்பில் எடுத்து நடத்தினேன். கணிசமான லாபம் கிடைத்தது. இதன் பின்னரே சினிமாத்தியேட்டரையும் வாங்கினேன்.

*கேள்வி:* இவற்றைக் கொள்வனவு செய்ய செலான் வங்கி கடன் வழங்கியதா?

*பதில்:* செலான் வங்கி நாவலப்பிட்டியில் கிளை திறந்தவுடனேயே நான் அதில் கணக்கொன்றை ஆரம்பித்தேன். சில்லறைக்கடை இருக்கும் போதே செலான் வங்கி கடன் வழங்கியது. மேலும் நான் நாவலப்பிட்டி மஞ்சி பிஸ்கட் விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டவுடன் லொறி ஒன்றை கொள்வனவு செய்யவும் வங்கி கடன் வழங்கியது.

*கேள்வி:* நீங்கள் வியாபாரத் துறையில் முன்னேற்றம் காண உதவியாக இருந்தவர்கள் யார்?

*பதில்:* வியாபாரத்தில் நான் மிக நேர்மையாக நடந்துகொள்வேன். கொடுக்கல் வாங்கல்கள் சீரான முறையில் நடைபெறும். அத்துடன் எனது நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களை நன்கு கவனித்துக் கொள்வேன். அவர்களும் நேர்மையாக நடந்து கொள்வர். இதைவிட செலான் வங்கியின் நாவலப்பிட்டிக் கிளை முகாமையாளர் எனது வளர்ச்சிக்கு பேருதவி புரிந்துள்ளார்.

*கேள்வி:* உங்கள் எதிர்காலத் திட்டங்கள் எவை?

*பதில்:* கம்பளை நகரில் சிற்றுண்டிச்சாலையுடன் கூடிய சினிமாத் தியேட்டர் ஒன்றை ஆரம்பிப்பதற்கான வேலைகளில் இப்போது ஈடுபட்டிருக்கின்றேன். இதற்கும் செலான் வங்கி கடன் வழங்க உறுதியளித்துள்ளது.

எனது வியாபார நடவடிக்கைகளுக்கு எப்போதும் செலான் வங்கி உறுதுணையாக இருந்துள்ளது. மேலும் எனது வியாபார நடவடிக்கைகளுக்கு எனது மனைவி உதவி புரிகின்றார்.

மக்களுக்கு குறைந்த செலவில் பொருள்கள் கிடைக்கச்செய்யவேண்டுமென்பதே எனது நோக்கம்.

இவ்வாறு கூறினார் ஜயலத் பிரேமலால்.



ரி.என்.எல். தொலைக் காட்சியில் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் ஜயலத் பிரேமலாலை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டபோது தமது அனுபவத்தை ஜயலத் பிரமேலால் விளக்குகிறார்.

ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர நிகழ்ச்சியில் கடந்த 15ஆம் திகதி தோன்றி, தமது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ஜயலத் பிரேமலால்.

**வர்த்தக ஸ்பெஷல்**

இருபது வருடங்களுக்கு முன் அவர் ஓர் இராணுவ முகாமில் சிற்றூழியராக இருந்தார். பின்னர் அந்த இராணுவ முகாமின் சிற்றுண்டி நிலையத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். படிப்படியாக முன்னேறி பெரும் வர்த்தகராகியிருக்கிறார் 'ஜயபூமி' நிறுவன அதிபர் ஜயலத் பிரேமலால்.

"வியாபாரத்தில் நேர்மையுடன் நடக்க வேண்டும். சீரான முறையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டும். ஊழியர்களை நன்கு கவனித்துக்கொள்ளவேண்டும். அவையே வெற்றியைத் தேடித்தரும்" என்கிறார் ஜயலத் பிரேமலால்.

ரி.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் ஜயலத் பிரேமலாலை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

---

# ஆனந்தசங்கரியுடன் டக்ளஸ் விரைவில் சந்தித்துப் பேச்சு

## சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு,ஜூலை18

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் விரைவில் பேச்சு நடத்தவுள்ளனர்.

- இவ்வாறு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பின் எச்சரிக்கைக்கு உள்ளாகியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ.ஆனந்தசங்கரியுடன் பேச்சில் ஈடுபடவுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பானது வடக்கு - கிழக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை விடுத்து, ஏனைய அரசியல் கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பது, அரசியல் கட்சியின் முக்கியஸ்தர்களைக் கொலை செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இது தொடர்பாக ஆராய்வதற்காகவே தாம ஆனந்தசங்கரியுடன் தொடர்புகொள்ளவுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதாக ஈ.பி.டி.பியின் செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான நெல்சன் எதிரிசிங்க தெரிவித்தார்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஈரோஸ் போன்ற அரசியல் கட்சிகளோடும் மேற்படி காரணத்தை முன்னிட்டு பேச்சு நடத்தி ஒரு தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், இதுவரையில் ஈ.பி.டி.பி., புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் பாதுகாப்புப்பிரிவின் புலனாய்வாளர்கள் 110பேர், விடுதலைப் புலிகள் அமைப்பினால் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் எதிரிசிங்க கூறியுள்ளார்-என்றுள்ளது.

(ஒ)

---

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு லண்டனிலிருந்து உதவிகள்

லண்டனில் வதியும் சாவகச்சேரி மக்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எலக்ரோனிக் இரத்த அழுத்த பரிசோதனை கருவியும் சாதாரண இரத்த அழுத்த பரிசோதனை கருவிகளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

அத்துடன், ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு ஒருதொகுதி பாய்கள் வாங்குவதற்கென நிதியும் இவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை - கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 15 பெண்களுக்கு வழங்கவென சேலைகளும் லண்டனிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-117)

---

# தமிழ்மொழிமூல தொழில்நுட்பக் கல்லூரி புத்தளத்தில் விரைவில் நிறுவ நடவடிக்கை

புத்தளம்,ஜூலை18

புத்தளம் நகரில் சகல வசதிகளையும் கொண்ட தமிழ்மொழி மூலமான தொழில்நுட்பக் கல்லூரியொன்று மிக விரைவில் அமைக்கப்படும் என்று மூன்றாம் இடைநிலைக்கல்வி அமைச்சர் கபீர்ஹாசிம் உறுதியளித்தார்.

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தோர் வாழும் புத்தளம் தொகுதியிலுள்ள எருக்கலம்பிட்டி மீள்குடியேற்றக் கிராமத்தில் கணனி பயிற்சி நிலையமொன்றையும் தையல் பயிற்சி நிலையமொன்றையும் அமைச்சர் ஹாஷிம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தபோதே இவ்வாறு உறுதியளித்தார்.

சுமார் 50லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கான அத்திவாரக்கல்லையும் அமைச்சர் நட்டு வைத்தார்.

வன்னி புனர்வாழ்வுக்குத் துணை புரியும் அமைச்சர் நூர்தீன் மசூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமேல் மாகாண அமைச்சர் எம்.எச்.எம் நவவி, உறுப்பினர் எம்.ஜ.பி. ஹாபி, முந்தல் பிரதேச செயலாளர் எம்.எஸ். மலிக், புத்தளம் பிரதேச செயலாளர் எம். நபீல் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் கபீர் ஹாஷிம் மேலும் பேசும்போது கூறியதாவது:-

அமைச்சர்களான நூர்தீன் மசூர், ஏ.எச்.எம் அஸ்வர் ஆகியோர் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மூவரும் ஒன்றிணைந்து புத்தளம் நகரில் தமிழ்மொழிமூல தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படவேண்டிய அவசியத்தை பிரதமரிடம் தெரிவித்தோம். அவரும் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். அக்கல்லூரியை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடும் பணி தற்போது இடம்பெறுகிறது - என்றார். (எ)

---

# விவசாயிகளுக்கு உலகமே உதவுகிறது; ஆனால், இலங்கையில் மானியம் வெட்டு!

## அமைச்சர் திஸாநாயக்க மீண்டும் மனம் புளுங்குகிறார்

கொழும்பு,ஜூலை,18

விவசாயத்தை ஓர் ஆபத்தான தொழிலாகக் கருதி அதனைத் தொடர்ந்து மேற்கொள்ள முழு உலகமும் உதவி வழங்குகிறது. ஆயினும், இலங்கையில் விவசாயத்துக்கு அரசு வழங்கும் மானியங்களை வெட்டிவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று விவசாய, கால்நடைவள, சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறினார்.

மகா இலுப்பல்லம விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கண்காட்சி ஆரம்ப வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

நாட்டின் சனத்தொகையில் 80வீததத்தினர் விவசாயத்துடன் தொடர்புபட்டவர்கள். இந்தியாவில் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குகிறார்கள்.அமெரிக்கா விவசாயிகளுக்கு உதவுகின்றது. ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகள் விவசாயிகளுக்குப் பெருமளவில் உதவுகின்றன. இலங்கையோ விவசாயிகளுக்கு வழங்கும் மானியங்களை வெட்டத் தீர்மானித்திருக்கின்றது.

இலங்கையில் மிகவும் வறிய மக்களே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் மானிய வெட்டால் வறியமக்கள் மேலும் கஷ்டங்களுக்கு உள்ளாவர். அதுமட்டுமன்றி, விவசாயமும் மேன்மேலும் வீழ்ச்சியடையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ)

---

# வந்தாறுமூலை வேர்ல்ட்விசன் காரியாலயத்தில் கொள்ளை

மட்டக்களப்பு,ஜூலை18

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரபற்று பிரதேசத்துக்கென வந்தாறுமூலையில் அமைக்கப்பட்டுள்ள மத்திய வேர்ல்ட்விசன் காரியாலயம் கடந்த திங்களன்று இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

இரவுநேரக் காவலாளி அற்ற அந்தக் காரியாலயத்தில் பிரதேச வேலைத்திட்டங்களுக்குரிய பல பொருள்களும் புதிய மூன்று கணனிகளும் பாடசாலை மாணவருக்கான உபகரணங்கள், தளபாடங்கள் என்பன வைக்கப்பட்டிருந்தன.

மூன்று புதிய கணனிகளும் மேலும பல தளபாடப் பொருள்களும் களவாடப்பட்டுள்ளன என்று ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

# சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழா

கொழும்புத்துறை,ஜூலை18

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக குருநாகல் ஆயர் வணக்கத்துக்குரிய குமாரபண்டார சாமுவேல் இலங்க சிங்க அடிகளும் திருமதி இலங்க சிங்கவும் கலந்துகொள்வர். (ஒ-30)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பத்தினி அம்மன் கோவிலடி, கம்பா மலை, வல்வெட்டித்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த யோகராஜா ஜெயந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (820858052V), விசேட அடையாள அட்டை என்பன 15.07.2003 அன்று கந்தரோடைக்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது சுபா தொலைத் தொடர்பகம், மானிப்பாய் வீதி, உடுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.5625. (20393)

ஊரெழு மேற்கைச் சேர்ந்த சரவணமுத்து துரைவீரசிங்கம் ஆசிரியருடைய தேசிய அடையாள அட்டை (இல.431661950V) அச்செழு அம்மன் ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அண்மையிலுள்ள பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.(20363)

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த ஞானானந்தம் ஞானபிரகாத் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 822811418V), விசேட அடையாள அட்டை (இல.0903004327) என்பன யாழ். பஸ்நிலையத்துக்கும் கரந்தன் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் சதீஸ் ஒலிப்பதிவுக் கலையகத்தில் ஒப்படைத்துதவவும். (20351)

செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா விசயன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0902004830) நெல்லியடிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது சிவசக்தி சலூன் (பஸ்நிலையம் முன்பாக), நெல்லியடி என்ற விலாசத்தில ஒப்படைத்துதவவும். (20401)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (20352)

## விற்பனைக்கு

செவ்வரத்தை (மஞ்சள் அடுக்கு), ஸ்பொஞ்பிளவர், மஞ்சள் கொடிப்பூ, முசந்தாஸ், எவக்கிறீன், முத்துப்பூ, குறோட்டன், நல்ல இன ரோஜாக் கன்றுகள் விற்பனைக்குண்டு.152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.C.இற்கு அண்மையில்) (20337)

GJ தொடர் இலக்கமுள்ள CD 125 BENLY மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன்: 2789. (20350)

## காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் கிணற்றுடன் கூடிய 3 நிலப் பரப்பு காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். பொ.செல்வராசா, ஆஸ்பத்திரி பின் ஒழுங்கை, மானிப்பாய். (20278)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, பழைய இலங்கை வங்கிக்கு அருகில் வெளிநாட்டு முறையில் கட்டப்பட்ட வீடு மூன்று பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா.கைலாயநாதன், C/o பஞ்சலிங்கம் (ஆசிரியர்), ஐயா கடையடி, மீசாலை. T.P. 0777 047007. (20322)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையில் 9 அறைகளும் வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏற்ற சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் நடத்துவதற்கு ஏற்றது. தொடர்பு: T.P. 2844. (20372)

தற்போது நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதி வாடகைக்கு அல்லது கொமிஷனுக்கு கொடுக்கப்படும். தொடர்பு: 67/9, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (20400)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 26 வயதுள்ள, மருத்துவ பீட மாணவிக்குப் பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். ஜாதகம் மற்றும் விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1957, C/o உதயன், யாழ்ப்பாணம். (20260)

## பயிற்சி வகுப்பு

குருநகர் அறிவகம் அமைப்பில் அடிப்படைக் கல்வியைப் போதித்து வரும் ஆசிரியர்களுக்கு தலைமைத்துவம் குறித்த பயிற்சி வகுப்பு வழங்கப்படவுள்ளது.

யாழ்.குருசோ வீதியில் அமைந்துள்ள அருட்கதிர் நிலையத்தில் இவர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று பி.ப.3.00 மணிக்கு நடத்தப்படும்.(எ-9)


2003 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான கொழும்பின் பிரபல ஆசிரியர் P.அம்பிகைபாகனின் இரண்டாவது பௌர்ணமி தின இலவச கருத்தரங்கு 11.08.2003 JAFFNA CENTRAL COLLEGE இல் நடைபெறும்.

கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் இலவச அனுமதி அட்டை பெற 25.07.2003 இற்கு முன் அதிபருடாக விண்ணப்பிக்க....

**Mr.P.Ambigaibagan,**
125/6, 16th Lane
College Street,
Colombo -13. (c/29016) (21-16-19)

**G.A.Q., B.A., B.A.II**
**யாழ்., பேராதனை**

புதிய பிரிவுகள்: 2003, 2004

| | |
|---|---|
| தமிழ் | க. தர்மராஜா |
| அரசியல் | P. சந்துரு |
| புவியியல் | K. கிரிதரன் |
| இ. நாகரிகம் | K.சத்தியதாசன் |
| மெய்யியல் | P.கமல் |

விரிவுரைகள் ஆரம்பம்:
19.07.2003 சனி
காலை 8மணி.

**நியூட்டன்**
ஆரியகுளம் சந்தி அருகில்
யாழ்.நகர்.
(21-26-16-19) (20397)


# மன்னார் வைத்தியசாலையை தரமுயர்த்தும்படி கோரிக்கை

## அடைக்கலநாதன் எம்.பி.அமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை18

மன்னார் ஆதார வைத்தியசாலையைப் பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு ஆவன செய்யுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுகாதார அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின தலைமையிலான தற்போதைய அரசு சகல மாவட்டங்களிலும் உள்ள ஆதார வைத்தியசாலைகளை மாவட்ட பொது வைத்தியசாலைகளாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற கொள்கையைக் கடைப பிடித்து வருகிறது. இதன் பிரகாரம் சகல மாவட்டங்களிலுள்ள மக்களும சகல வைத்திய வசதிகளையும் பெறறுக் கொள்வதற்கு வாய்ப்பேற்பட்டுள்ளது.

மன்னார் ஆதார வைத்தியசாலையானது நூறு வருடங்களுக்கும் மேல் பழைமை வாய்ந்தது. இது ஆதார வைத்தியசாலை என்ற பெயருடன் ஒரு சில வைத்தியர்களுடனும் சிறுதொகுதி ஊழியர்களுடனும் இயங்கி வருகிறது. வைத்திய நிபுணர்களது சேவை இந்த வைத்தியசாலையில் இருந்ததென்று எவராவது கூறினார்களேயானால் இப்பகுதிமக்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வைத்தியர்கள், ஊழியர்கள் பற்றாக்குறை, வைத்திய நிபுணர்கள் எவருமற்ற நிலை ஆகியவற்றுடன் இந்த வைத்தியசாலை கொடிய போரினால் அல்லற்பட்டுக் கொண்டிருந்த வன்னிவாழ் மக்களுக்கு ஆற்றிய சேவை அளப்பரியது.

நூறு வருடங்களுக்கு முன்பிருந்த சுகாதார உயர் அதிகாரிகளுக்கு மன்னாருக்கென்று ஓர் ஆதார வைத்தியசாலை அவசியமெனத் தோன்றியமையினாலேயே அன்று இங்கு இந்த வைத்தியசாலை உருவாக நேர்ந்தது. பல மடங்கு சனப்பெருக்கத்துடன் நூறு வருடங்களின் பின்னர் தற்போது இம் மாவட்டத்தின் நிலை எப்படி இருக்கும என்று சற்று எண்ணிப்பாருங்கள்.

சகல மாவட்டங்களிலும் ஆதார வைத்தியசாலைகளை பொதுவைத்தியசாலைகளாகத் தரமுயர்த்தும் அரசின் கொள்கைக்கமைய மன்னார் ஆதார வைத்திசாலையையும் தரமுயர்த்தி வன்னி மாவட்ட மக்களுக்குத் தேவைப்படும் வைத்திய வசதிகளை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு ஆவன செய்யவும்- என்றுள்ளது. (ஓ-10)


**வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்பாள் திருக்கோயில்**
**மண்டலாபிஷேக பூர்த்தி**
நவோத்தர சகஸ்ர கலச சங்காபிஷேக விஞ்ஞாபனம்

19-07-2003 சனிக்கிழமை
காலை 7.00 மணிமுதல் இரண்டாம் கால யாகபூசை, விஷேட திரவ்ய ஹோமம், பூரணாகுகு விஷேட பூசை.
முற்பகல் 10.45 மணியளவில் 1009 கலச சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட பூசை மற்றும் அன்னதானமும் இடம்பெறும்.
மாலை 5.00 மணியளவில் மூலஸ்தான பூஜை
6.00 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை, திருவூஞ்சல்.
*தொடர்ந்து மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் அம்பாள் வீதி வலம் வருதலும் நடைபெறும்.*
சங்காபிஷேக பிரதம குரு:
*ஆகமக் கிரியாஜோதி சிவஸ்ரீ சதா மகாலிங்கசிவக்குருக்கள்*
(அதிபர், சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி, திருநெல்வேலி)
கலச சங்காபிஷேக உபயம்:
வே.கந்தசாமிக் குருக்கள் குடும்பத்தினர்.
வதிரி. (ஆலய பிரதமகுரு) (21-16-19) (20407)

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHO THERAPY)**
யாழ்ப்பாணத்தில் 15.07.2003 - 22.07.2003 வரை
இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரைக் குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.
உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!
ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.
தொடர்புகொள்ளவும்:
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
**Govt. Regd. No. 9492**
**HOT LINE: 0777 569205**
**T.P.: 3181, 5399**
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).
(சி-28906) (21-15-18)


## கண்ணீர் அஞ்சலி

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் தலைவர்

**இராமலிங்கம் சிதம்பரநாதன்**

அவர்கள்16.07.2003 புதன்கிழமை காலமாகிய செய்தி கேட்டு துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சி.கனகரத்தினம்
கதிர் வேலவன் அரிசி ஆலை,
கைதடி.

க.ச.கணபதிப்பிள்ளை,
கைதடி, (20399) (21-15-16)

## இதய அஞ்சலி

ஈழத்தின் நாதஸ்வரமேதை

**கலாசூரி என்.கே.பத்மநாதனின**

மறைவு ஈழத்து கலாரசிகர்களுக்கு மட்டுமல்ல: சர்வதேச கலாரசிகர்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். சர்வதேச நாடுகள் பலவற்றிலும் எமது கலையின் பெருமையை நிலைநாட்டி மறைந்துள்ள நிகரில்லா கலைஞருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு, அவரின் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

நா.சோமாஸ்கந்தக் குருக்கள், நா.சர்வேஸ்வரக் குருக்கள்
*கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.*
(சி-29011) (21-25-15-16)

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

18.07.2003

செல்வன் ம.கௌசிகன்



*யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர்களான*

**திரு.திருமதி மகேஸ்வரன் - மகாலட்சுமி**

*தம்பதிகளின் செல்வப் புதல்வன்*

**செல்வன் கௌசிகன்**

தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (18.07.2003,) வெள்ளிக்கிழமை சுவிஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் கௌசிகனை சுவிஸில் இருக்கும் அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா (உடுவில்), நகுலேஸ்வரன் பெரியப்பா (சுவிஸ்), மனோகரன் சித்தப்பா (யாழ்ப்பாணம்) மற்றும் அத்தைமாரான கனகாம்பிகை, புனிதவதி, ஞானாம்பிகை, லலிதாம்பிகை (புத்தூர்), யசோ (ஆவரங்கால்), விக்கி (அவுஸ்திரேலியா) மற்றும் மாமன்மார்களான மனோ (ஆவரங்கால்), மோகன் (அவுஸ்திரேலியா), இரத்தினேஸ்வரன் (யாழ்ப்பாணம்), விஜயபாலன் (யாழ்ப்பாணம்), தவசசன் (புத்தூர்), கலாச்சித்தி (சுவிஸ்), செல்விச் சித்தி (யாழ்ப்பாணம்) மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார், தில்லைக்காளி அம்பாள், கோவில் பிள்ளையார் ஆகியோரின் திருவருள் பெற்று பல்கலையும் கற்று, சீரோடும் சிறப்போடும் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ்க! வாழ்க! என மனமார வாழ்த்துகின்றார்கள்.

50, நாவலடி லேன், வண்.மேற்கு,
யாழ்ப்பாணம். (20288) (21-24-15-16)

**அன்புடன் மனோகரன் சித்தப்பா (யாழ்ப்பாணம்).**

# மக்களின் பங்களிப்பு உள்ள திட்டங்களே வெற்றி பெறும்!

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உரை

வலி.தெற்கு,ஜூலை18

பொதுமக்களின் பங்களிப்புடன் செயற்படுத்தப்படும் திட்டங்களே வெற்றிபெறும்.

- இவ்வாறு தெரிவித்தார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஷ்ணசாமி.

உடுவில் சபாபதிப்பிள்ளை வீதியில் வலிகாமம் பிரதேச சபை ஊழியர்களுக்கெனக் கட்டப்பட்ட வீடுகளைத் திறந்துவைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரக்கொண்டாட்டங்களின் ஆரம்ப நிகழ்வாக இத்திறப்பு விழா இடம்பெற்றது.

பிரதேச சபையில் கடமைபுரியும் தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு பிரதேச சபையின் நிதியில் இருந்து ஒவ்வொன்றும் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் ஆறு குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு, திறப்பு விழாவையடுத்து வீடுகள் உரிய தொழிலாளர் குடும்பங்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்தில் இன்று சுற்றுப்புறச் சுகாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சூழல் மாசடைகின்றது. நிலத்தடி நீர் பாதிப்படைவதால் பலவித நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றைப் போக்கி சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாத்து நகரத்தை அழகுபடுத்தி மக்களை நல்வாழ்வு வாழச் செய்பவர்கள் சுகாதாரத் தொழிலாளர்களே. அவர்களின் வாழ்க்கை நல்லமுறையில் அமைந்தாலே நாம் நல்லபடி வாழலாம். சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாப்பவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் சிந்தனை பிரதேச சபைக்கு ஏற்பட்டமை பாராட்டத்தக்கது.

பிரதேச சபைகளுடன் உள்ளூராட்சித் திணைக்களம் நல்ல உறவை - பிணைப்பை - ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றது. மக்களின் நலன் கருதி நாம் செயற்படுத்தும் திட்டங்களுக்கு மக்களின் பங்களிப்பு அவசியம். மக்கள் பங்களிப்பு இருந்தால்தான் தேவைகளை இனங்கண்டு, திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த முடியும்.

யாழ்ப்பாண மாநகரசபைக்கு அடுத்ததாக நல்லூர், சுன்னாகம் பிரதேச சபைகளே கூடுதல் வருமானங்களைப் பெறும் சபைகளாகவுள்ளன. அவை தமது வருமானங்களை நல்ல திட்டங்களுக்காகப் பயன்படுத்தவேண்டும். இதுவிடயத்தில் ஏனைய நகர சபை, பிரதேச சபைகளும் இணைந்து சேவையாற்ற வேண்டும் - எனக் கூறினார்.

(ஓ-152)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறைப் பிரதேச சபை ஏற்பாட்டில் புலோலி பொது நூலக வளாகத்தில் மரம் நடுகை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கணக்காய்வு அத்தியட்சகர் எஸ்.கே.சற்குணம் மரக்கன்று ஒன்று நடுவதையும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமி, பருத்தித்துறை பதில் நீதிவான் என்.தங்கராஜா உட்பட நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

# இறைவனைச் சரண் புகுந்தால் அனைத்து வரமும் கிடைக்கும்

சரணாகதி என்பது உதட்டளவில் இருக்கக்கூடாது. கடவுளிடம் முழுமையாகச் சரணடையவேண்டும். இல்லாவிட்டால் பகவானின் கிருபையைப் பெறமுடியாது.

ஒருமுறை சலவைத்தொழிலாளி ஒருவர் ஒருபக்தனைக் கடுமையாக அடித்தான். அப்போது பக்தன் "நாராயணா! நாராயணா!" என்று மட்டும் சொல்லி அலறினான். அப்போது ஸ்ரீமன் நாராயணர் வைகுண்டத்தில் லட்சுமி சமேதராக வீற்றிருந்தார். அவர் காதில் இந்தக் கூக்குரல் விழுந்தது. உடனே அவர் எழுந்து புறப்பட ஆயத்தமானார். தேவி அவரிடம் "நாதா! தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"தேவி! என்பக்தன் ஒருவன் பெரிய ஆபத்தில் இருக்கிறான். அவனை நான் அவசியம் காப்பாற்றியாக வேண்டும்" என்று சொல்லிவிட்டு அவசர அவசரமாக நாராயணன் புறப்பட்டார். ஆனால், இரண்டு மூன்று அடிதூரம் சென்றதும் மீண்டும் திரும்பி வந்து அவர் தம் ஆசனத்தில் அமர்ந்துவிட்டார். இதைப்பார்த்து லட்சுமி திகைத்தாள். "பிரபு! இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டீர்கள்? ஏன்?" என்று கேட்டாள்.

நாராயணன் புன்முறுவல் பூத்தபடியே பதில் சொன்னார். "நான் போக வேண்டிய அவசியமே இல்லாமல் போனதை உணர்ந்தேன். அந்தப் பக்தனும் சலவைத்தொழிலாளி ஆகிவிட்டான். தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள நினைத்து இப்போது அவன் தன்னை அடித்தவனை திருப்பி அடிக்கத்தொடங்கியிருக்கிறான். ஆகவே, நான் அங்கே போய்ச்செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. எனவே, அவசியம் இல்லாததால் நான் உடனே திரும்பி வந்து விட்டேன்!" என்று நாராயணன் சொல்லிவிட்டார்.

முற்றிலுமாக நீ உன்னைக் கடவுளிடம் ஒப்படைத்து விடவேண்டும். அப்படி நீ செய்தாலன்றிக் கடவுள் உன்னைக் காப்பாற்றமாட்டார். உண்மையாகவே உன்னை நீ பகவானின் பீடத்தில் சமர்ப்பித்துவிடவேண்டும்.

எவன் ஒருவன் கடவுளிடம் முற்றிலுமாகத் தன்னை அர்ப்பணித்து சரணமாகப் பற்றுகிறானோ அவனை மட்டுமே பகவான் காப்பாற்ற முன்வருகிறார்.

ஞானக்கதிர்

### மீனவன் சன்னியாசியானான்!

ஒரு பணக்காரனுக்கு ஒரு குளம் சொந்தமாக இருந்தது. ஒரு நாள் மீனவன் ஒருவன் அந்தத் தோட்டத்திற்குள் ஒருவரும் அறியாதபடி இரகசியமாக நுழைந்தான் அங்குள்ள குளத்தில் வலை வீசி திருட்டுத்தனமாக மீன் பிடித்துக்கொண்டிருந்தான்.

பணக்காரனுக்கு செய்தி தெரியவந்தது. அவன் தனது வேலைக்காரர்களுடன் தீவட்டிகளை எடுத்துக் கொண்டுவந்து திருடனைப் பிடிப்பதற்காகத் தோட்டத்தை சுற்றிவளைத்துக் கொண்டான். தப்புவதற்கு வழி ஒன்றும் இல்லாததைக் கண்ட மீனவன் தன் உடல் முழுவதும் சாம்பலைப் பூசிக் கொண்டு ஒரு மரத்தடியில் சாதுவைப்போல உட்கார்ந்துவிட்டான்.

திருடனைத் தேடிவந்த வேலைக்காரர்கள் தோட்டம் முழுவதும் தேடிப் பார்த்தார்கள். திருடன் ஒருவனும் அகப்படவில்லை. ஒருமரத்தடியில் உடம்பு முழுவதும் சாம்பல் பூசிய சன்னியாசி ஒருவர் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருப்பதைத்தான் வேலைக்காரர்கள் கண்டார்கள். அந்த விவரத்தைத் திரும்பப்போய்ச் சொன்னார்கள்.

தோட்டத்திற்குள் ஒரு பெரிய மகான் எழுந்தருளி இருக்கிறான் என்ற செய்தி ஊர்முழுவதும் பரவியது நூற்றுக்கணக்கான மக்கள் பழங்கள், மலர்கள், பட்சணங்கள் ஆகியவற்றை காணிக்கையாக எடுத்துக்கொண்டு திரள்திரளாக சாதுவைத் தரிசிப்பதற்காக வர ஆரம்பித்தார்கள். ஏராளமான காணிக்கைப் பொருளை சாதுவின் திருவடிகளில் வைத்து வணங்கினார்கள். சாதுவின் முன்னால பொன், வெள்ளி நகைகள் குவியத்தொடங்கின.

அப்போது சாதுவின் வேடத்தில் இருந்த மீனவன் "ஆகா! இது என்ன ஆச்சரியம்! நானோ உண்மையான சன்னியாசி அல்லன்! அப்படி இருந்தும் மக்கள் என்னிடம் இவ்வளவு மரியாதைகள் செலுத்துகிறார்களே? நான் உண்மையிலேயே சன்னியாசியாக இருந்தால், எனக்கு கடவுளின் தரிசனமே கிடைப்பது நிச்சயம். நிச்சயமாக நான் இறைவனின் அருளுக்குப் பாத்திரனாவேன். அதில் சந்தேகத்திற்கே இடமில்லை!' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு சன்னியாசியாகவே மாறிவிட்டான்.

மீனவன் மேற்கொண்ட போலி வேடமே அவனுடைய உள்ளத்தில் உண்மையான ஆன்மீக விழிப்பை ஏற்படுத்திவிட்டது. நாமும் கடவுளிடம் ஈடுபட முயன்றால், முதலில் அது செயற்கையாக இருந்தாலும், மெல்ல மெல்ல இயற்கையானதாக மாறிவிடும்!

*(நன்றி: ஞானபூமி)*

# செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினருடன் தொடர்புகொள்ள கோரப்பட்டோர்

யாழ்ப்பாணம்,ஜூலை18

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு பின்வருவோர் வேண்டப்படுகின்றனர்.

திருமதி லீகோரி அந்தோனியாப்பிள்ளை, 17/10, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

திருமதி கதிரன் மேரி, உச்சியோடை, மானிப்பாய் மேற்கு, யாழ்ப்பாணம்.

திருமதி சின்னகுமார் ஹெலன் 132, புதியகடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

பாவிலு சார்ள்ஸ், 52,கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

திருமதி ஆசீர்வாதம் நிர்மலா தேவி, ஹென்ஸ்மன் ஒழுங்கை, உடுவில்.

பாவிலுபிள்ளை தேவதாஸ், H-9, ஐந்துமாடி வீட்டுத்திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்.

(ஓ)

# உடதலவின்ன வழக்கு திங்கள் வரை ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூலை18

உடதலவின்ன படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

வழக்கின் பிரதிவாதிகளான லொகான் ரத்வத்த, சானுக ரத்வத்த ஆகிய இருவரது தரப்பிலும் ஆஜரான சட்டத்தரணி ரந்த வரலியத்த தான் சுகவீனமுற்றிருப்பதால் வழக்கை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டதை அடுத்தே விசாரணைகள் பிற்போடப்பட்டன.

மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இந்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்தது. இந்த விசாரணைகளுக்கென அனுருத்த ரத்வத்த உட்பட பிரதிவாதிகள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

விசாரணை ஆரம்பமாகியபோது பிரதிவாதிகளின் சட்டத்தரணி வழக்கை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

(எ-4)

# ஹெரோயின் விற்பனையில் ஈடுபடும் பெரும் புள்ளிகளுக்கு வலைவீச்சு!

## பிரதமரின் பணிப்பையடுத்து பொலீஸ் நடவடிக்கை

கொழும்பு,ஜூலை18

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் பெரும் புள்ளிகளுக்கு வலைவீசும் வேட்டை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று குற்றப்புலனாய்வு உளவுப் பிரிவின் பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்திருக்கிறார். போதைப்பொருள் பாவனைக்கு எதிரான அரச சார்பற்ற அமைப்புகளின் கூட்டு சம்மேளனத்தின் ஏற்பாட்டிலான பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்நாட்டுக்குப் போதைப்பொருள்களைக் கொண்டுவந்து விநியோகிக்கும் பெரும் புள்ளிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் பணித்திருக்கிறார். இந்தப் பெரும் புள்ளிகள் கொழும்பு ஏழிலும் களனிப் பகுதியிலும் ஆடம்பர மாளிகைகளில வாழ்கிறார்கள் என்பது தெரியவந்திருக்கிறது.

போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் இவர்கள் பற்றிய விபரங்கள் கிடைத்திருக்கின்றன. ஆயினும், போதைப்பொருள் கையில் இருந்தால் மட்டுமே ஒரு சந்தேக நபரைக் கைதுசெய்யலாம் என்ற சட்டத்தின் காரணமாக அவர்கள் தமது வியாபாரத்தை சுதந்திரமாகச் செய்ய முடிகிறது.

இந்தநிலைமை குறித்து நாம் பிரதமரிடம் எடுத்துக்கூறினோம். தற்போதுள்ள சட்டத்தைத் திருத்தி அல்லது புதிய சட்டம் கொண்டுவந்து அந்தப் பெரும் புள்ளிகளை சட்டத்தின்முன் கொண்டுவருமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

- இவ்வாறு அவர் கூறினார்.

(எ)

# மனிதப் பிறவியின் மாண்பினை அறிவோம்!

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்றார் ஒளவையார். இப்படிப் பெருமை பேசும் நாம், இப்பிறவி எப்படிக் கிடைத்தது? இப்பிறவிக்கு நாம் பெறக் காரணகாரியங்கள் எவை? இப்பிறவியின் பயன் யாது? என்று எண்ணுவதில்லை. நம்மில் மிகப் பெரும்பான்மையோர் இது பற்றி என்றுமே எண்ணாத போதும், ஞானிகளும், மகான்களும், முனிவர்களும், அறிஞர்களும், சித்தர்களும் அன்றும் இன்றும் இதுபற்றி அயராது நன்கு சிந்தித்து எமக்கு நல்வழிகாட்டியுள்ளனர்.

எல்லாம்வல்ல கடவுளுடைய திருவடிகளை அடைவதற்காகவே நாம் பிறவி எடுத்தோமாதலால் அந்தத் திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், தியானித்தலுமே எமது தலையாய கடனாகும். இன்றைய காலகட்டத்தில் இறைவழிபாடு இல்லாத மனிதன் விலங்கு எனவும், இறைவழிபாடு செய்கின்ற மனிதன் தேவன் எனவும் நாம் உணரவேண்டும்.

உடலறிவு, ஆற்றல், திறமை, நல்லொழுக்கம், வல்லமை, அழகு இப்படியாக மனிதனுக்கு மனிதன் மிகப் பெரும் வேற்றுமையுடன் பிறக்கின்றானே. இதன் மர்மம் தான் என்ன? இதற்கு விடைகூறும் இந்துமதம், ஒருவன் இப்புவியில் வாழும் வாழ்வு அவன் முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களின் பயன் என விளக்கியுள்ளது.

**சமூகமணி சி.சி.வரதராசா**

ஆகவே, பிறவி எடுத்ததன் நல்ல பயன் இறைவனை நாம் எல்லோரும் உள்ளன்போடு, புனிதமாக வணங்கி முத்தியின்பம் பெறுவதேயாகும். சிவபெருமானே முழுமுதற்கடவுள். அவரே உலகத்திற்குக் கர்த்தா. ஆகையால், நாம் அவரது பாதக்கமலங்களைப் பணிந்து எமது பாதக மலங்களைப் போக்கிக் கொள்ளலாம். நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் இதைத்தான் வலியுறுத்தியுள்ளார்.

கடவுளிடம் பக்தி செலுத்த வயதும் தோற்றமும் குறுக்கிடாது. கல்வி, செல்வம், ஜாதி, பலம் முக்கியமல்ல. நல்ல ஆசாரம், நற்குணம் இவற்றிலும் இறைவன் அவ்வளவாகக் கவனம் செலுத்துவதில்லை. அவர் அன்பு ஒன்றையே எதிர்பார்க்கிறார். அன்பு இல்லாதவருக்கு தானமும் தவமும் செய்யாதவருக்கு விண்ணுலக வாழ்வு நிராகரிக்கப்படும். இதனால், அவன் மீண்டும் பிறந்தே ஆகவேண்டும்.

இந்தநிலையில்லா மனிதவாழ்வில் நீர்க்குமிழிக்கு நிகரான சொற்பகாலத்தில் நன்மையைச் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ளுதல்வேண்டும். வங்கிக் கணக்கில் பணம் இருந்தால்தான் தேவைக்கு எடுத்துக் கொள்ளமுடியும். சொர்க்கம் என்னும் வங்கியில் புண்ணியம் என்ற பணத்தைப் போட்டுவைத்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தப் பிறவியிலே புண்ணியத்தைச் செய்தால் அதன்பலனை நிச்சயம் பெற்றுக்கொள்ளலாம்.

மானிடப்பிறவி எடுத்த நாம் முதலில் மனிதனாக வாழப்பழகவேண்டும். எமது மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம் புரியவேண்டும். புனிதமான மனத்தால் செய்யும் அறம் கடவுள் உணர்வும் நற்சிந்தனையும் ஆகும். மொழியால் புரியும் அறம் ஆண்டவன் திருநாமம் ஓதிப் புகழ் பாடுதலும் பிறருக்குத் துன்பம் பயவாத மொழிகளைக் கூறுதலுமாகும். உடலால் புரியும் அறம் பதியை மலர் கொண்டு பரவுதல் அடியார்களுக்குத் தொண்டு பூணுதல், பிற உயிர்களுக்கு நன்மை செய்தலுமாம்.

☆

## வடக்கு - கிழக்கு மாகாண

# மீன்பிடி அபிவிருத்திக்கு 700கோடி ரூபா ஒதுக்கீடு

## அரச ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு,ஜூலை18

வடக்கு - கிழக்கில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அரசு 700கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மீனவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள், இறங்குதுறைகள், மீன்பிடித்துறைகள் என்பவற்றை அமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீனவக் கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து இத்திட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் - கூறப்பட்டது.

கடலரிப்புக்கு உள்ளாகியிருக்கும் கிழக்குப் பிரதேசத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் இந்த நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் தலா 10லட்சம் ரூபா செலவில் 55 மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கப்படும்.

பொத்துவில் நகரத்தில் நவீன வசதிகளைக் கொண்ட மீன்விற்பனை நிலையமும், களஞ்சியசாலையும் அமைக்கப்படவுள்ளது. அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

(எ-4)

# தனுஷ்கோடி - தலைமன்னார் இடையிலான படகுச் சேவை குறித்து கலந்துரையாடல்

## துறைமுக அமைச்சர் அடுத்த மாதம் கொழும்பு வருகிறார்

கொழும்பு.ஜூலை18

இலங்கைக்கும், இந்தியாவிற்குமிடையில் படகுசேவை (Ferry service) ஒன்றை நடத்துவது சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கென இந்திய துறைமுக அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை வருகைதரவுள்ளார்.

துறைமுக கப்பல்துறை மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் படகுச் சேவையினை நடத்துவதற்கு இருநாடுகளும் தமக்குள் பரஸ்பரம் இணங்கியுள்ளன. மேற்படி படகுச் சேவைக்காக இருநாடுகளும் கடற்பாதைகள் பற்றி ஆராய்ந்துள்ளன.

அவற்றுள் தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலான பாதையே மிகவும் குறுகியதாகவும்- கட்டண ரீதியில் குறைவானது என்றும் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டதாகவும் - கூறப்பட்டது.

தனுஷ்கோடி- தலைமன்னார் பாதை பிரயாணிகளுக்கு சௌகரியமானதாகவும், பொருளாதார ரீதியிலும குறிப்பாக ஆலய யாத்திரிகர்களுக்கு மிகவும் உகந்ததாகவும் கருதப்படுகின்றது.

திருகோணமலைக்கும் - மூதூருக்கும் இடையிலான படகுச் சேவை, பிரயாணிகளின் நன்மை கருதி துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளது.

அதன் நிமித்தம் துறைமுக அதிகாரசபை 50லட்சம் செலவில் மூன்று வள்ளங்களை புனர்நிர்மாணம் செய்துள்ளது என்றும் - அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (எ)


யாழ். பிரதான வீதியில்.........
இப்பொழுது நாங்கள் உங்களுடன்
இணைகின்றோம்....

**FAST COMMUNICATION STUDIO AND COLOUR LAB**

நிறுவனத்தாரின் மற்றுமொரு சேவை!

யாழ். - கொழும்பு - யாழ். விமான பற்றுச்சீட்டுக்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

முன்பதிவுகளுக்கு அழையுங்கள்:
**222 2591, 222 5894**

(21-15-19)

★ உறுதிப்படுத்தப்பட்ட பயணச்சீட்டுக்கள்

★ வர்ண புகைப்படச் சுருள்களை மிக விரைவாகப் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**பாஸ்ட் ஸ்ருடியோ அன் கலர் லாப்**
392, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(c.29018) (சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகில்)


### இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு
யாழ்ப்பாணம்

16ஆம் திகதி இரவு அகாலமரணமான எங்கள் உள்ளூர் உத்தியோகத்தர்

**இராமலிங்கம் கேசவன்**

அவர்களின் மறைவையிட்டு அதிர்ச்சியையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் மேற்படி குழு தெரிவித்துக்கொள்கிறது. நாங்கள் அவருடைய குடும்பத்தாருடன் சேர்ந்து மனம் வருந்துகின்றோம்.

*195, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.* (20405)(21-25-15-19)

*தலைவர், கண்காணிப்பாளர்கள், உள்ளூர் உத்தியோகத்தர்கள்*

## மனமாரப் பாராட்டுகின்றோம்



**திரு. மாணிக்கம் விஜயரட்ணம்**
*(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், ப.நோ.கூ.ச.)*
கரகத்தாம்புலம், கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.



**திரு. தம்பு கணேசன்**
*உபதபால் அதிபர் (சமரபாகு)*
பளவத்தை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

பெரியப்பாமார் இரண்டு பேரும் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளமைக்காக அவர்களை மனமாரப் பாராட்டுகின்றோம். என்றும் சமாதானத்தை நிலைநாட்டுவீர்களாக.

**ம.முகிலன்,
ம.லக்ஷ்மன்,
ம.நிவேதினி.**

*முகிலன் தொலைத்தொடர்பு,
லக்ஷ்மன் தொலைத்தொடர்பு,
நிவேதினி இணைய சேவை,*
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை. (20406)(21-15-19)

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை18

அளவையூர் பண்டிதர் க.நாகலிங்கத்தின் 'செய்யுளியலும் அணியியலும்' நூல் வெளியீட்டு விழா அளவெட்டி மகாஜனசபை வாசிகசாலை மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில். நூல் வெளியீட்டுரையை கவிஞர் சோ.பத்மநாதன நிகழ்த்துவார்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பண்டிதர் அ.ஆறுமுகம், முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஆகியோர இதில் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (எ-9)

### பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை18

கடல்வள உயர் தொழில்நுட்பவியல் பாடநெறி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இருநாள்களும் காலை 9மணி முதல் 4 மணிவரையும் இடம்பெறும் இக்கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-9)

### குருநகர் 'யுத்' புனரமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை18

குருநகர் 'யுத்' கழகம் கடந்த இருபது வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.அண்மையில் நடைபெற்ற இக்கழகத்தின் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். (எ-9)

### தபால் ஊழியர்களுக்கு நீலநிறத் தொப்பிகள்

சாவகச்சேரி,ஜூலை18

சாவகச்சேரி தபாலக தபால் விநியோக ஊழியர்களுக்கு நீலநிறப் புதிய தொப்பிகளை தபால் திணைக்களம் வழங்கியுள்ளது.

புதிய மழைக்கவசங்களும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-31)

### வீதி செப்பனிடப்பட்டது

சாவகச்சேரி,ஜூலை18

நீண்ட காலமாக செப்பனிடப்படாது, குன்றும்குழியுமாகக் காணப்பட்ட நுணாவில் - கனகன்புளியடிச் சந்தி வீதி செப்பனிடப்பட்டுள்ளது.

மேற்படி வீதியின் அவலம் தொடர்பாக, அப்பகுதி மக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்தே வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதியைத் திருத்தியமைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-31)

### சட்ட விரோத இறைச்சி அழிப்பு

கடந்த ஞாயிற்றுக்கிழமை, போயா தினமன்று யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட 120 கிலோ மாட்டிறைச்சி அழிக்கப்பட்டுள்ளது.

பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கொல்களம் மேற்பார்வையாளர்கள் ஆகியோரால் கைப்பற்றப்பட்டு அவை அழிக்கப்பட்டதாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (எ-9)

### தமிழ்த்தின விழா

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் மகாவித்தியாலய தமிழ்த் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய தமிழ்மொழி உதவிக் கல்விப்பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் கலந்துகொள்வார்.(எ-4)

### தீவக வலய உடற்கல்வி அதிகாரி நியமனம்

தீவகக்கல்வி வலயத்திற்கு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக சின்னத்துரை மகாலிங்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக உடற்கல்விக்கான உதவி பணிப்பாளர் நியமனம் செய்யப்படாமையால் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீவகக் கல்வி வலயம் முகங்கொடுத்து வரவேண்டிய நிலைமை காணப்பட்டது.

வலிகாமம் கல்வி வலயத்தில் உடற்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றியவரே தற்போது பதவிஉயர்வு பெற்றுள்ளார். (ஓ-86)

# ஜி.ரி.இசற் புனரமைத்த பாடசாலைகள் ஜூலை 22இல் அதிபர்களிடம் கையளிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் யாழ்.குடாநாட்டில் ஜி.ரி. இசற் நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட 55 பாடசாலைகள் அதிபர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான வைபவம் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய் காலை 11மணிக்கு யாழ்பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வூட்டர் வில்ரன் பிரதம விருந்தினராகவும், சிறப்புவிருந்தினராக புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும் கலந்துகொள்வர்.

இவ்வைபவத்தில் யுத்தத்தினால் சேதமடைந்து பின்னர் ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட 55 பாடசாலைகளை ஐரோப்பிய ஒன்றிய வதிவிடப் பிரதிநிதி வூட்டர் வில்ரன் அதிபர்களிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிப்பார். (எ-8)

# பொலீஸார் மீதான குற்றச்சாட்டு; முறைப்பாட்டாளர்களுக்கு அழைப்பு

அடிப்படை மனித உரிமைகளை பொலீஸார் மீறியதாகச் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கென முறைப்பாட்டாளர்களை பொலீஸ் தலைமை அலுவலகம் அழைத்துள்ளது.

குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட உயர்நீதிமன்றம், அடிப்படை மனித உரிமைகள் பொலீஸாரால் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே, சம்பந்தப்பட்ட பொலீஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன. இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே கொழும்பு தலைமையக விசேட விசாரணைப் பிரிவினர், முறைப்பாட்டாளர்களை அழைத்துள்ளனர்.

முறைப்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்ள பொலீஸார் முயற்சித்த போதும், முறைப்பாட்டாளர்கள் வழங்கிய விலாசங்களில் அவர்கள் தற்போது இல்லையெனத் தெரிய வந்துள்ளது.

ஆகவே, சம்பந்தப்பட்ட முறைப்பாட்டாளர்கள், கொழும்பு பொலீஸ் தலைமையகத்துடன் 449850 அல்லது 449852 அல்லது 449853 ஆகிய தொலைபேசி எண்களில் ஒன்றுடன் தொடர்புகொள்ளுமாறு பொலீஸ் தலைமை அலுவலகப் பேச்சாளர் கேட்டுள்ளார்.

தொடர்புகொள்ளக் கோரப்பட்டுள்ள முறைப்பாட்டாளர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:

★ கந்தையா பிரபாகரன், கந்தரோடை, சுன்னாகம்.

★ சிவராசா சிவதீஸன், பூநகரி, கிளிநொச்சி.

★ குழந்தைவேல் லோகநாதன், உயிலங்குளம், மன்னார்.

★ செல்லத்துரை சண்முகராசா, பேசாலை, மன்னார்.

★ சிவசுப்பிரமணியம் சிவகரன், நட்டான்கண்டல், மாங்குளம். (ஓ-9)

### SRI LANKA MONITORING MISSION JAFFNA

Express its shock and deepest sympathies on the sudden death of

**RAMALINGAM KESAVAN**

our Local staff member on 16th night.
We all grieve with the berieved family.

*195, Temple Road,
Jaffna.* (20404)(21-15-19)

**Head of District,
Monitors,
Local staff.**

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு: 03 - 01 - 1957



உதிர்வு: 29 - 07 - 2002

**திருமதி தர்மகுலசிங்கம் கமலாதேவி**
(கமலா)

திதி:- 18.07.2003

அன்புடனே எம்மைப் பெற்ற அன்னையே!
எங்கு சென்றீர் எமை விட்டு?
பொன்னிலைப் போல் எம்மைப் பேணியே
வளர்த்தீர் அம்மா
ஆண்டொன்று ஆனாலும் அழியாது உன்நினைவு
ஆறாது எம் இதய வேதனைகள்
அன்போடு அரவணைக்க மீண்டும் வாராயோ?
என்றும் உன் நினைவால் ஏங்கித் தவிக்கும்

(21-15-19)

*190, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.* (20403) **கணவர், பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை வரதராஜா (வரதன்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வரதராஜா நேற்றுமுன்தினம் (16.07.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - சிவபாக்கியத்தின் அன்பு மகனும் சித்திராவின் பாசமிகு கணவரும் ஏபாவோஸ் பாலா, ஜானகி ஆகியோரின் அன்பு மருமகனும் சிவராஜா, கவிதா (பிரான்ஸ்), ஜெகன் வனிதா (பிரான்ஸ்), காலஞ்சென்ற அசோக்கா (பிரான்ஸ்), பிரசாத் (யாழ்ப்பாணம்) ஆகியோரது மைத்துனரும் கபில் (பிரான்ஸ்), அஜந்தா (பிரான்ஸ்) ஆகியோரது சித்தப்பாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*175, சென்ராஸ்ஸ் லேன்,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.* (20408)(21-24-15-10)

தகவல்: பா.பிரசாத் (மைத்துனர்).

# நாகசுரத்தை வளர்க்க இசைக்கல்லூரி இதுவே என்.கே.பிக்கு அளிக்கும் அஞ்சலி

## இறுதி நிகழ்வில் மாவை சேனாதிராஜா எம்.பி.

யாழ்ப்பாணம்,ஜூலை18

ஈழத்தில் அருகிவரும் நாதசுர, தவில் கலையை வளர்க்க தனியான இசைக்கல்லூரி ஒன்றை அமைப்பதே, அமரர் பத்மநாதனுக்கு நாம் அளிக்கும் அஞ்சலியாகும்.

-இப்படிக் கூறினார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

கலாசூரி பத்மநாதனின் இல்லத்தில் நேற்று முற்பகல் நடந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 50ஆண்டு காலமாக இந்த மண்ணுக்குத் தன்னையே அர்ப்பணித்து, எந்தவித பெருமையும் இன்றி, தனது மூச்சையே சொத்தாகக்கொண்டு அரும்பணியாற்றி வந்த பத்மநாதன் சுகவீனம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அங்கு சென்ற என்னுடன் பேச முயன்றார். ஆனால், அவரால் பேசமுடியவில்லை.

இன்று அவர் எம்மத்தியில் இல்லை. ஆனால், அவர் ஒலித்த நாதம் எமது காதில் மட்டும் அல்லாமல், எமது நரம்புகளையும் துடிக்க வைத்துக்கொண்டிருக்கின்றது.

இசை உலகில் ஜாம்பவான்களாக விளங்கிய காரைக்குறிச்சி இராசரத்தினம், சின்னமௌலானா வரிசையில் இவர் இலங்கையில் இலக்கண முறையில் நாதசுரக்கலையை வளர்த்து வந்தார். அவருக்குப் பின்னர் எம்மிடையே அவர் போன்ற கலைஞர் இல்லை என்றே கூறலாம்.

ஈழத்தில் நாதசுர, தவில் கலை அருகி வருகின்றது. அந்தக் கலையை வளர்க்க, இளம்கலைஞர்களை உருவாக்க இசைக்கல்லூரி ஒன்று உருவாக்கப்படவேண்டும். அக்கல்லூரி மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற ஏற்பாடு செய்யவேண்டும். இதுவே, அமரர் பத்மநாதனுக்கு நாம் அளிக்கும் அஞ்சலியாகும் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் பேசுகையில்:-

தலைசிறந்த கலைஞனை இழந்து நாம் தவிக்கின்றோம். உன்னத கலைஞனை இழந்த ஈழத்தாய் கண்ணீர் வடிக்கின்றாள். யாழ்.பல்கலைக் கழகம் அவரைக் கௌரவித்துப்பட்டம் வழங்கவேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். அடுத்த பட்டமளிப்பில் அவருக்கு கௌரவப்பட்டம் வழங்க ஏற்பாடு செய்வோம் - என்றார் அவர்.

பேராசிரியர் சண்முகதாஸ் தமது அஞ்சலியுரையில், நாசுரம் ஒன்று அழுகின்றது. அந்த நாசுரத்தைக் கையாண்ட விரல்கள் துடிக்கின்றன. ஆனால், அந்த நாசுரத்தைக் கையாண்ட கலைஞன் மட்டும் அமைதியாகத் தூங்குகிறான்.

மேலுலகில் இருக்கும் மகாமேதைகளான காரைக்குறிச்சி, மௌலானா, தெட்சணாமூர்த்தி ஆகியோர் பத்மநாதனை வரவேற்கக் காத்திருக்கின்றனர். இங்கு பெய்த இசைமழை மேலுலகில் பொழியப்போகின்றது.

கடந்த 50வருட இசைப் பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டங்களையும் பதக்கங்களையும் பெற்றார் பத்மநாதன். அந்தப் பட்டங்களால் அவர் பெருமைப்படவில்லை. ஒழுக்கம், கட்டுப்பாடு, தெய்வீகப்பணி ஆகியவற்றை ஏனைய கலைஞர்களுக்கு காட்டிச் சென்றுள்ளார் - என்றார்.

ஆறு.திருமுருகன் தமது அஞ்சலி உரையில்:-

அரச வைபவங்களாயினும் சரி முக்கிய மாநாடுகளாயினும் சரி அவற்றை ஆரம்பித்து வைக்கும் கலைஞன் யார் என்று பார்த்தால் அது என்.கே.பத்மநாதனாகவே இருக்கும். அவர் சைவபக்தனாக, ஒழுக்கசீலனாக வாழ்ந்த வாழ்க்கை எமது ஏனைய கலைஞருக்கு ஒரு முன்மாதிரி என்றே கூறலாம் - என்றார்.

இந்த நிகழ்வில் மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், பேராசிரியர் சிவஞானசுந்தரம், இசைவேளாளர் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம், பிரபல நாகசுர வித்துவான் ஆர்.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் கோபாலகிருஸ்ணஐயர், இரா செல்வவடிவேல், கலாபூஷணம் கணபதிப்பிள்ளை (சின்னமணி) உட்படப் பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.(எ-3)



அமரர் என்.கே.பத்மநாதனின் இறுதிக்கிரியைகளின்போது செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துகின்றனர்.

## காற்றோடு கலந்தது நாதம்...



மலர் தூவி அஞ்சலிக்கும் மனையாள்.



செவிக்கு இன்பம் சேர்த்தவருக்கு கரம் கூப்பி அஞ்சலி செலுத்தும் மக்கள்.



பெற்ற கடன் தீர்க்கும் தனயன்.



தீயுடன் சங்கமமாகும் என்.கே.பி.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2786971 இருந்து 2804345 வரை

சீட்டிழுப்பு இல. 1418 திகதி 16.07.2003

வெற்றி எண்கள் 16 25 26 35 42

போனஸ் எண் 33

ஜக்பொட் பரிசு ரூபா.4,057,550/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 4,057,550/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 84 | 10,000/- | 840,000/- |
| 3 | 5,364 | 500/- | 2,682,000/- |
| 2 | 90,376 | 20/- | 1,807,520/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 16ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 110,932 | 10/- | 1,109,320/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,838,840/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 4,915,200/-

தொடர் இல. 3772643க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஜூலை 19ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2800144-6-97
2795731-5-12
2788207-0-41
2789878-1-10
2789530-9-32

அபிவிருத்தி லொத்தர் சபை இல. 32, சென் மைக்கல் வீதி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்; 94, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# பேரழிவு ஆயுதம் இல்லையென்ற பின்பே ஈராக் மீது யுத்தம் தொடங்கப்பட்டது

**ஈராக் பேரழிவு ஆயுதங்களைத் தன்வசம் வைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியே அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது போர் தொடுத்தன. ஆனால் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் எவையும் கிடையாதென உறுதிப்படுத்திக்கொண்ட பின்னரே போர் ஆரம்பிக்கப் பட்டதாகக் கூறுகிறார் கட்டுரையாளர் எம்.எஸ்.எம்.அயூப். 'லக்பிம' நாளிதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

ஈராக் தற்போது இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கான தனது திறனை விரிவாக்கம் செய்வதிலும், உற்பத்தியை அதிகரிக்கச்செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது என கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி ஐ.நா.சபையில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்திருந்தார்.

"ஈராக் வசம் இரசாயன உயிரியல் ஆயுதங்கள் எதுவும் கிடையாதென



சதாம் ஹுசைன் எமக்குத் தெரிவித்திருந்தபோதிலும் அவ்வகை ஆயுதங்களைக் கையாள்வதற்கான அதிகாரத்தை அண்மையில் அவர் தனது இராணுவக் கட்டளையிடும் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன" என புஷ் கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது குறிப்பிட்டிருந்தார்.

"ஈராக் ஆட்சியாளர்கள் தம்வசம் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை வைத்திருப்பது மட்டுமன்றி, அவ்வகை ஆயுத உற்பத்தியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். பரந்ததொரு பிரதேசம் முழுவதிலும் இரசாயன மற்றும் உயிரியல் வாயுக்களைப் பரப்பி விடக்கூடிய திறன் கொண்டதும் நிலத்திலிருந்தபடியே இயக்கக்கூடியதுமான விமானங்களை பெருந்தொகையில் தன்வசம் வைத்திருப்பது மாத்திரமன்றி, அவற்றின் எண்ணிக்கையை நாளுக்கு நாள் சதாம் அதிகரித்து வருவதாகவும் புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது" என்பது அமெரிக்க ஜனாதிபதி 'ஒகியோ' பிராந்தியத்திலுள்ள சின்சிநாடி என்ற இடத்தில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 07ஆம் திகதி பேசிய சமயம் வெளியிட்ட கருத்தாகும்.

இவ்வாண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களைச் சந்தித்த சமயம் "செரீன், மஸ்ரட் மற்றும் வீஎக்ஸ். நேர்வ் ஆகிய நச்சுவாயுக்களை 500 தொன்வரை உற்பத்தி செய்யக்கூடிய இரசாயன திரவத்தை சதாம் ஹுசைன் வைத்திருப்பதாக எமது புலனாய்வுத் துறையின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்" எனவும் ஜனாதிபதி புஷ் அச்சமயம் தெரிவித்திருந்தார்.

இரசாயன மற்றும் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் ஆகியவற்றை ஈராக் தன்வசம் வைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டி அமெரிக்க, மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இவ்வாண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி ஈராக்கின் மீது போரை ஆரம்பித்தன. தற்போது இவ்விரு நாடுகளும் ஈராக்கைக் கைப்பற்றித் தமது நிர்வாகத்தின் கீழ் வைத்துள்ளன. ஆனால் புஷ் பட்டியலிட்ட வைகள் குறிப்பிட்டது போன்ற பேரழிவு ஆயுதங்களுக்கு என்ன நேர்ந்தது? அவை தற்போது எங்குள்ளன? என்பது இன்று பொதுமக்களின் கேள்விகளாக எழுந்துள்ளன.

படும் முன்னாள் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், 500தொன் எடையுள்ள அத்தனை ஆயுதங்களையும் சாக்குகளில் நிரப்பியோ அல்லது காற்சட்டைப்பைகளுக்குள் போட்டோ தன்னுடன் எடுத்துச் சென்று விட்டாரா? என்பதே இப்போது எழுப்பப்படும் வினாவாகும்.

ஈராக்மீது அமெரிக்கா தாக்குதலை ஆரம்பிக்கும் முன்னராகவே ஈராக் வசமிருக்கும் இரசாயன மற்றும் பெரும் அளவில் நாசம் விளைவிக்கக் கூடிய ஆயுதங்களை அழித்துவிட வேண்டியிருப்பதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பல்ட் கூறியதாக கடந்த மே மாதம் 28ஆம் திகதி பி.பி.சி வானொலி செய்தி வெளியிட்டது.

"இரசாயன மற்றும் பேரழிவை விளைவிக்க வல்ல ஆயுதங்களை அழித்துவிட வேண்டும், அல்லது எமக்குக் காட்டவேண்டும். இவற்றை நிறைவேற்றாத பட்சத்தில் ஈராக்கை ஆக்கிரமித்து உங்களை அதிகாரத்திலிருந்து அகற்றுவோமென சதாமை எச்சரித்துக்கொண்டே அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்கை ஆக்கிரமித்தன. ரம்ஸ்பீல்ட் கூறிய பிரகாரம் இரகசியமான முறையில் அவ் ஆயுதங்கள் அழித்துவிட்டு, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகியவற்றினால் ஆக்கிரமிக்கப்பட இடமளித்து, அவர்களினால் தாம் பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு சதாம் ஒரு முட்டாள் அல்லவே.

உண்மை அதுவல்ல: என்ன நடந்ததென்பதை முழு உலகமும் அறியும். ஈராக்கின் வசம் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் எதுவும் கிடையாதென ஈராக் ஆக்கிரமிக்கப்படுவதற்கு முன்னரே உலகத்து மற்றைய நாடுகளைப் போன்றே அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் சந்தேகம் கொண்டிருந்தனர். இப்போது நாம் சிந்தித்துப் பார்க்கும் போது அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்கிடம் குறிப்பிட்ட ஆயுதங்கள் எவையும் கிடையாதென உறுதியாகத் தெரிந்துகொண்ட பின்னரே, ஈராக் மீது போர் தொடுத்ததாக எண்ணத் தோன்றுகிறது. ஈராக்கிடம் அவ்வகை ஆயுதங்கள் இருந்திருப்பின், பெரும்பாலும் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அவ்வித ஆக்கிரமிப்பு யுத்தமொன்றைத் தொடங்குவது குறித்து எண்ணிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகர உலக வர்த்தகமையக் கட்டடத்தின் மீதும், வாஷிங்டன் நகரிலுள்ள 'பெண்டகன்'கட்டடத்தின் மீதும் பயங்கரவாதத தாக்குதலை மேற்கொண்டு அழிவுகளை உண்டாக்கியவரெனக் கருதப்படும் ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில் மறைந்து வாழ்ந்த காரணத்தினாலேயே ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. ஆனால் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றித் தம்வசம் கொண்டு வந்ததன் பின்னர் ஒசாமா பின்லேடனைத் தேடிக்கண்டு பிடிக்கும் நடவடிக்கையில், அமெரிக்கா அக்கறையுடன் செயல்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களுக்காக கஸ்பியன் கடலிலிருந்து இந்து சமுத்திரத்துக்கு எண்ணெய்யை எடுத்து வருவதற்காக ஆப்கானிஸ்தான் வழியாக பாதையொன்றை அமெரிக்கா உருவாக்கிக்கொண்டதாகக் கூறப்படுகிறது. அவ்விதமே அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து ஈராக், உலக மக்களுக்கு பேராபத்தை உண்டு பண்ணக்கூடிய இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை தன்வசம் வைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியே ஈராக் மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டன.

தற்போது ஈராக் அமெரிக்காவின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஈராக்கினுள் குறிப்பிட்ட பேரழிவை விளைவிக்கவல்ல ஆயுதங்கள் எவற்றையும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளனர். ஆனால் அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களும், நிர்மாணக் கட்டமைப்பு நிறுவனங்களும் ஈராக் நாட்டில் பரந்த அளவிலான முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளன. இவற்றை நோக்கும்போது அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் ஆக்கிரமிப்பை மேற்கொண்டமைக்கான காரணம் தெட்டத்தெளிவாக எமக்குப் புரிகிறது.

ஈராக் நாட்டின் நிலப்பரப்பின் அடியிலுள்ள உலகத்தின் பெரிய அளவிலான எண்ணெய் வளத்தைத் தானே நிர்வகிக்கும் அதிகாரத்தை அடைவதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

இவ் எண்ணெய் வளத்தை அடைவதற்கான அவசியத்தேவை காரணமாக ஈராக் அதிபரைத் தமக்குக் கீழ்ப்படியவைக்கும் நோக்கத்தில் அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலகத் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபையை இணங்கச்செய்து ஈராக்குக்கெதிராகப் பொருளாதாரத் தடையை விதிக்க வைத்தனர். இதன் காரணமாகப் பத்தாண்டு கால இடைவெளியில் குழந்தைகள் உட்பட ஈராக்கியப் பொதுமக்களில் 14லட்சம் பேர் உயிரிழக்க நேர்ந்ததாக சதாம் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்ட சுகாதார அமைச்சு முன்பொரு தடவை தெரிவித்திருந்தது.

ஆனால் இவற்றில் எதுவும் மேற்குலக நாடுகளுக்குப் பிரச்சினையாகத் தோன்றவில்லை. ஈராக்கின் வசம் இரசாயன ஆயுதங்கள் உள்ளனவா எனப் பரிசோதனை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஐ.நா. சபையின் ஆயுதப் பரிசோதனையாளர்கள் தமது பரிசோதனை நடவடிக்கைகளின் பின்னர் ஈராக்கினுள் அவ்வித இரசாயன ஆயுதங்கள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லையெனத் தெரிவித்தவேளையில், இம்



மேற்குலக நாடுகள் "இல்லையில்லை. அவ்வகை ஆயுதங்கள் அந் நாட்டில் எங்கோ மறைத்து வைக்கப்பட்டுள்ளன" எனக்கூறின. அதன்பின்னர் அமெரிக்காவும் பிரிட்டனும் அவ்வகை ஆயுதங்களால் தமக்குத் தாக்குதல் பயமுறுத்தல் எதுவும் கிடையாதென உறுதிப்படுத்திக்கொண்ட பின்னரே, அவ்வகை இரசாயன ஆயுதங்களைத் தேடிக்கண்டுபிடிக்கப் போவதாகக் காரணம் காட்டி ஈராக் மீது போர் தொடுத்து அதனை ஆக்கிரமித்தன.

என்ன நடக்கிறது என்பதனை முழு உலக மக்களும் தெரிந்து வைத்திருந்தனர். பல நாடுகளின் புதினப் பத்திரிகைகள், புத்தி ஜீவிகளைக் கொண்ட செய்தி ஊடகங்கள் மற்றும் சர்வதேச இணையத்தளங்கள் ஆகியவை இத்துரோகத்தை 'வெளிக்கொணர்ந்த போதிலும், உலகத்தின் பொது ஜன அபிப்பிராயத்தை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் 'மேற்குலகச் செய்தி ஊடகங்கள், தமது நாட்டின் தலைவர்களைப் போன்றே ஈராக்கின் வசம் மனித இனத்தையே அழித்து விடத்தக்கதென நம்பப்படும் பயங்கர ஆயுதங்கள் இருப்பதாகச் சந்தேகிக்கக்கூடிய வகையில் 'செய்திகளை வெளியிட்டு வந்தன. ஆயுத பரிசோதனைக் குழுவினர் ஈராக்கில் பயங்கர ஆயுதங்களோ மற்றும் அவற்றை உற்பத்தி செய்வதற்கான ஆதாரங்களையோ தம்மால் கண்டு கொள்ள முடியவில்லையென அறிக்கை மூலம் தெரிவித்திருந்தபோதிலும், மேற்குலகத் தலைவர்கள் எவரும் அவ் அறிக்கையினை ஏற்றுக்கொள்ளவில்லை.

எப்படியிருந்தபோதிலும், இவ் ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் மேற்கொள்ளும் தேடுதல்களின் போது அவ்வகைப் பயங்கர ஆயுதங்கள் இருப்பதாக உறுதிசெய்து கொள்வதை நோக்கமாகக் கொள்ளாது அவ்வகைப் பயங்கர ஆயுதங்கள் எவையும் ஈராக்கின் வசம் இல்லை என்பதை உறுதி செய்துகொள்வதே அமெரிக்காவின் நோக்கமாக உருவாகியிருந்தது. 1991இல் முதலாவது வளைகுடா யுத்தத்தின் போது இப்பயங்கர ஆயுதங்களை ஈராக் தன்வசம் வைத்திருக்கக்கூடுமென்ற சந்தேகத்தினால் - அவ்வேளையில் ஈராக்கைக் கைப்பற்றிக்கொள்வதற்கு உற்சாகம் காட்டாத அமெரிக்கா, இவ்வாண்டில் இரண்டாவது வளைகுடா யுத்தத்தை ஆரம்பித்து ஈராக்கைக் கைப்பற்ற முனைந்தமைக்கான காரணம் இதுவேயாகும்.

மேற்குலக நாடுகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்திவந்த ஊடகங்களில் சில தற்போது ஆத்ம கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கில் அமெரிக்கா மற்றும் பிரிட்டனது நடவடிக்கைகளை விமர்சிக்க ஆரம்பித்துள்ளன. அந்த வகையில் அண்மையில் பி.பி.சி என அழைக்கப்படும் பிரிட்டிஷ் ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது ஒலிபரப்பில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர், நாட்டு மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கி, ஈராக் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு பிரிட்டிஷ் படையினரை அனுப்பிவைத்தாரெனக் குற்றம் சாட்டியது. அக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் சில பகுதிகள் தொடர்பாக ஆட்சேபனை எழுப்பிய பிரிட்டிஷ் அரசு, அதற்காக பி.பி.சி மன்னிப்புக் கோர வேண்டுமென கோரியது. இருந்தபோதும் பி.பி.சி. அவ்விதம் மன்னிப்புக் கோருவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும், பத்தாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவும் பிரிட்டனும், ஈராக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் செயற்படுவதாக உலகம் பூராவும் ஓர் உணர்வைத் தோற்றுவிக்க முயன்ற பி.பி.சி. தற்போது பிரிட்டிஷ் அரசு தன்நாட்டு மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கியதாக அவசர அவசரமாகக் கண்டுபிடித்துள்ளது. அமெரிக்க ஊடகத்துறை எதுவும் தமது ஆட்சியாளர்கள் தவறான தகவல்களைத் தெரிவித்ததாக இதுவரையில் குரலெழுப்பியதாகத் தெரியவில்லை. ஒருசில அமெரிக்க செய்திப் பத்திரிகைகள் ஈராக் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தவறான செய்திகளை வெளியிட்டதாகத் தெரிவித்துள்ள போதிலும், பொதுமக்கள் மனதில் திடமான அபிப்பிராயத்தை உருவாக்கக்கூடிய பரந்த அளவிலான பிரசாரம் இவ் ஊடகங்களினால் மேற்கொள்ளப்படவில்லை.

ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிப்போர் தம்நாட்டு மக்களின் அபிப்பிராயத்தைத் திசைதிருப்பும் நோக்கில் தவறான தகவல்களைப் பொது மக்களுக்கு வழங்குவதைப் பாரதூரமான குற்றமாக அமெரிக்கமக்கள் கருதுவதாகப் பற்பல சம்பவங்களைக்கொண்டு தெரிந்து கொள்ளமுடிகிறது. வியட்நாம் யுத்தம் தொடர்பான விடயத்தில் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டதன் காரணமாக அப்போதைய ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் இரண்டாவது தடவையாக ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கான தமது விருப்பத்தைக் கைவிட நேர்ந்தது.

1972இல் 'வாஷிங்டன் போஸ்ட்' செய்தித்தாளின் 'பொபிவூட்வேர்ட்' மற்றும் 'நியூயோர்க் ரைம்ஸ்' செய்தித்தாளின் 'சார்ல் பர்ன்ஸ்டயின்' ஆகிய இரு ஊடகவியலாளர்களும் அப்போதைய குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி 'றிச்சர்ட் நிக்சன்' தமது எதிரணியான ஜனநாயகக் கட்சியின் தலைமையகமான 'வாட்டர்கேற்'றில் இடம்பெற்ற சகல தொலைபேசி உரையாடல்களையும்



ஒலிப்பதிவு செய்து கொண்டதாகச் செய்தி வெளியிட்டனர். முதலில் அதனை ஜனாதிபதி நிக்சன் மறுத்த போதிலும், அவ்விரு பத்திரிகையாளர்களும் தொடர்ச்சியாக விவரங்களை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியதையடுத்து அவர் அவ்விடயத்தில் தவறிழைத்தமை நிரூபிக்கப்பட்டது. அதன் பலனாக கடைசியில் ஜனாதிபதி நிக்சன் தனது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டியேற்பட்டது.

"அப்பெண்மணியுடன் நான் எவ்வித பாலுறவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதில்லை"யென மொனிக்கா லுவின்ஸ்கி விடயத்தில் ஜனாதிபதி பில் கிளிங்டன் பகிரங்கமாக மறுப்புத் தெரிவித்தபோதும், பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் தப்பித்துக்கொள்ள முடியாத இக்கட்டில் செல்வி மொனிக்கா லுவின்ஸ்கியுடன் தாம் நெருக்கமான தொடர்பு பேணியமைக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டி ஏற்பட்டது. அவ்விடயத்தில் அவர் தம்மீதான குற்றச்சாட்டிலிருந்து மயிரிழையில் தப்பித்துக்கொள்ள முடிந்தது.

தற்போது உருவாகியுள்ள பிரச்சினை தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி ஜனாதிபதி புஷ் ஈராக் விடயத்தில் அமெரிக்க மக்களுக்குத் தவறான தகவல்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டாகும். அவர் அவ்

**வீயெஸ்ரி**

விதம் நாட்டு மக்களுக்குத் தெரிவித்த தகவல்கள் தவறானவையாகத் தற்போது தோன்றுகின்றது. ஆனால், அமெரிக்க மக்களின் மனச்சாட்சி அது தொடர்பாக கிளர்ந்தெழாதது ஏன்? கிளிண்டன் விடயத்தில் அமெரிக்க மக்களது மனச்சாட்சி கிளர்ந்தெழுந்தமைக்கான காரணம் அமெரிக்கர்கள் பாரம்பரியப் புகழுக்கு இழுக்கு நேர்வதாக அவர்கள் நம்பியதன் காரணமாக இருக்கலாம். நிக்சன் விடயத்தில் அவர்களது மனச்சாட்சி கிளர்ந்தெழுந்தமைக்கான காரணம் பசியினாலும், மருந்து வகைகள் கிடைக்காமையாலும் துன்பமுறும் ஈராக்கிய சிறுவர் சிறுமியர் உட்பட்ட லட்சக்கணக்கான பொது மக்களது வாழ்க்கையைவிட குடியரசுக்கட்சித் தலைமைக் காரியாலத்தின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டமை பாரதூரமான குற்றமென அவர்கள் கருதியதன் காரணமாக இருக்கலாம்.

## வருடாந்த பொங்கல் உற்சவம்



இந்நிகழ்வு இன்று (18.07.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணி தொடக்கம் நாளை (19.07.2003) சனிக்கிழமை காலை 10 மணி வரை நடைபெற இருப்பதனால் அடியார்கள் அனைவரும் இப்பொங்கல் விழாவில் கலந்து அவள் அருளாள் அவன் தாழ் பணிந்து அருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

- பரிபாலனசபை.

நீர்வேலி மேற்கு,
மாலை வைரவர் தேவஸ்தானம். (20418) (32-12-18-31)

## அறிவித்தல்

மறு அறிவித்தல் வரை சிற்றூர்தி சேவைச் சங்கங்களில் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடுவதற்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை தெரிவித்துக்கொள்கிறோம்.

*யாழ்.மாவட்ட சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணையம்.* (20413) (31-12-18)
பொ.கெங்காதரன் (தலைவர்).

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி கந்தையா

எமது பாடசாலை ஆசிரியை **செல்வி க.இராஜேஸ்வா** அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி கந்தையா** (புலோலி தெற்கு)

அவர்களின் மரணச் செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

பாடசாலைச் சமூகம்
யா/குடத்தனை அ.த.க.பாடசாலை,
குடத்தனை.

(C29028) (32-12-18-31)

## கலாசூரிக்கு எம் அஞ்சலிகள்



தன் மூச்சை இசையாக்கி
தரணியை வசப்படுத்தியவன்
கேட்போரின் செவிகளெல்லாம்
இசையமுதம் நிரப்பியவன்
இறைவன் அழைத்திடவே
அமரருள் ஒருவனானான்.

அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, துயரில் தவிக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீ வரதராஜ விநாயகர் தேவஸ்தானம்,
கொட்டாஞ்சேனை. (சி-29727) (12-18-12-31) - நிர்வாகம்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஐயா சிவராசா

நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிஐயா சிவராசா அவர்கள் 15.07.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - தங்கமுத்துவின் மூத்த மகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் விமலாதேவி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சீவரத்தினம், காலஞ்சென்ற குணராசா, அன்னலிங்கம், பத்மாவதி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கார்த்திகேசு, புனிதவதி, சத்தியதேவி, புனிதம், பாக்கியம், தருமலிங்கம், பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் மகேந்திரன் (சுவிஸ்), குகேந்திரன் (ஜேர்மனி), ஞானேந்திரன் (கொழும்பு), தேவராணி (லண்டன்), சிவராணி (சுவிஸ்), தவேந்திரன் (லண்டன்), சுவேந்திரன் (கொழும்பு), உதயராணி (சுவிஸ்), கலாராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வரதலட்சுமி (சுவிஸ்), சுதர்சினி (ஜேர்மனி), விஜித்தா (கொழும்பு), நிர்மலராஜன் (லண்டன்), விமலச்சந்திரன் (சுவிஸ்), கமலேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாரங்கி, சாரங்கன் (சுவிஸ்), லூகாஸ், அமிலாஸ் (ஜேர்மனி), நிஷானி (கொழும்பு), கவிஷா, நிருஷா (லண்டன்), துவாரகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.07.2003 ஞாயிற்றுக்கிழமை நாவற்குழியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப. 10 மணியளவில் நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

*நாவற்குழி கைதடி.* (20416) (32-12-18-31)

### திருமதி சுப்பிரமணியம் கமலேஸ்வரி

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலேஸ்வரி நேற்று (17.07.2003) வியாழன் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சுப்பிரமணியத்தின் (P.W.D. ஓவசியர், மாத்தளை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லையா, சிவசம்பு மற்றும் நவரட்ணம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மீனலோஜினி மற்றும் தவமணிதேவி (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), தவரட்ணசிங்கம், ஜெயராஜசிங்கம் (டென்மார்க்), நிசாந்தினி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தர்மராசா மற்றும் சாம்பசிவம், தியாகேஸ்வரி, திலகா (டென்மார்க்), ஞானேஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் மாமியாரும் குலதர்மா (பாபு), குணதர்மா (கனடா), ரட்ஷிகா (யாழ். பல்கலைக்கழகம் முகாமைத்துவம்), செந்தூரன் (2003 A/L மத்திய கல்லூரி), தர்சியன் (2002 A/L ஹாட்லிக் கல்லூரி), தாரணி (2004 A/L மெதடிஸ் கல்லூரி), தர்சனா (டென்மார்க்), விதுசா (இத்தாலி), பவித்திரன் (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும் தர்சிகனின் (கனடா) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2003) வெள்ளிக்கிழமை 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*நந்தாவில் லேன், தாவடி, கொக்குவில்.* (20419) (31-12-18)

## ஐஸ் தொழிற்சாலை இன்று திறப்பு விழா

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாச ஐஸ் தொழிற்சாலை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சமாசச் செயலாளர் எஸ். சூரியகுமாரன் தலைமையில் பருத்தித்துறையில் நடைபெறும்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த திருமதி ஞா.சிவபாதசுந்தரம் இதனைத்திறந்து வைத்து ஐஸ் உற்பத்தியை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார். (எ-173)

## எழுச்சிப் பேரவை உறுப்பினர் சந்திப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊரக தேசிய எழுச்சி பேரவை உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல் இன்று மாலை 3.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இந்த ஒன்றுகூடலில், பிரதேச ஊரக தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (எ)


**லஷ்சுமி சினிமா**
இணுவில்
அஜித், ஜோதிகா, சிம்ரன் நடித்த
**வாலி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00,2.00,7.00 (பி.நே.)
(C28976) (31-12-18)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
**பாறை** (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
THE LORD OF THE RINGS
தினசரி 8.45 இரவு.
(C28977) (31-12-18)

**லிபேட்டி** அச்சுவேலி

சத்தியராஜ், ரம்பா, செந்தில், மணிவண்ணன் நடித்த
**மிலிட்டரி** (ரீலஸ்)
தினசரி காட்சி நேரம் 3.00, 7.00 (பி.நே.)
THE MUMMY
தினசரி காலை 11.00
(செரில்லாப்படம்) (ரீலஸ்)
(C28888) (31-12-18)

**நாகம்ஸ்** சுன்னாகம்
21-7 வரை
விக்ரம், பிரியங்கா, பிரகாஷ்ராஜ் நடித்த
**காதல் சடுகுடு** (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேட காட்சி 7.00 (பி.நே.)
(C28787) (31-12-18)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
**பிரியமான தோழி** (ரீலஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(31-12-18)


## கண்ணீர் அஞ்சலி



எமது தேவஸ்தான ஆரம்பகால ஆஸ்தான வித்துவான் நாதஸ்வர மேதை

**கலாசூரி என்.கே.பத்மநாதன்**

அவர்களின் திடீர்மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- தர்மகர்த்தாக்கள் சபையினர்.

கும்பழாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி. (20414) (12-12-18-31)

## ஆழ்ந்த அனுதாபங்கள்



அளவெட்டி நாதஸ்வர வித்துவான்

**கலாசூரி**

**என்.கே. பத்மநாதன்**

அவர்கள் காலமானதை அறிந்து அதிர்ச்சியும், கவலையும் அடைகிறோம். சில வருடங்களுக்கு முன் காஜாங் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடத்திய இசை நிகழ்ச்சி இன்னமும் எமது செவிகளில் ரீங்காரமிடுகிறது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

DR.S.பாலகிருஸ்ணன்,
அவர்கள்
காஜாங், மலேசியா.

(20417) (18-12-31)

## கான கலாநிதியே மீண்டும் எம்மிடம் வருவாயா?



நாதஸ்வர இசை மழை பொழிந்த
மன்னவனே!
இனி எங்கு சென்று கேட்போம்
உங்கள் நாதகானத்தை?
கான கலாநிதியே மீண்டும்
வருவாயா எம்மிடம்?

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

35,மேபீல்ட் வீதி,
கொட்டாஞ்சேனை. (C29026) (32-12-18-31) பொ.பாலசுந்தரம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி பத்மினிதேவி அமிர்தலிங்கம்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கதிராசிப்பிள்ளை**
**வீரகத்தி**

16.07.2003 அன்று இறைபதம் எய்தி விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர்- ஆசிரியர்கள், மாணவர்கள்,
ப.அ.ச.உறுப்பினர்கள்,
யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை.

(20410) (32-18-12-31)

### மாநகர சபை, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்குறிப்பிட்ட கட்டட அமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் '7' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி :- 31.7.2003 பி.ப. 3.00 மணி.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 6.8.2003 பி.ப. 12.30 மணி.
கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி :- 6.8.2003 பி.ப. 2.30 மணி.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதற்கென இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையில் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்வி நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| | கேள்வியின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் VAT உட்பட |
|---|---|---|---|
| 01. | கல்வியங்காட்டு பொதுச்சந்தை புனரமைப்பு வேலை - பகுதி I | 40,000/- | 1,200/- |
| 02. | கல்வியங்காட்டு பொதுச்சந்தை புனரமைப்பு வேலை - பகுதி II | 30,000/- | 1,200/- |

மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
17.7.2003

**இ.இராமலிங்கம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# புலிகளைக் கைது செய்வதற்கு மேற்கொண்ட முயற்சி முறியடிப்பு

### மட்டக்களப்பு கல்லடியில் சம்பவம்

மட்டக்களப்பு,ஜூலை18

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரேமினி மற்றும் அவரது உதவியாளர் கமிலினி ஆகியோரைக் கைதுசெய்வதற்கு பொலீஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்ட முயற்சி பொதுமக்களின் தலையீட்டால் தடுக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

நேற்று மட்டக்களப்பு கல்லடி முருகன் கோவிலுக்கு அருகில் மோட்டார் சைக்கிளொன்றில் சென்று கொண்டிருந்த இருவரையும் கைது செய்வதற்காக இராணுவத்தினர் பின் தொடர்ந்து வந்துள்ளனர்.

புலி உறுப்பினர்களை பொலீஸா வழிமறித்தனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் அனுமதிப் பத்திரத்தைக் கேட்டனர். அனுமதிப் பத்திரம் இல்லாததால் அவர்களைக் கைதுசெய்யப் போவதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், அங்கு திரண்ட மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து அதை தடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு, கல்லடியில் வைத்து சில தினங்களுக்கு முன்னர் புலிகளின் உறுப்பினர்கள் எட்டுப்பேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். எண்மரும் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டு விளக்கமறியலில் தற்போது வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-5)

# புலிகள் - புலனாய்வுப் பிரிவினர் வவுனியாவில் முறுகல் நிலை

### கண்காணிப்புக் குழு தலையிட்டு தணித்து வைப்பு

வவுனியா, கிடாச்சூரி பகுதியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் தணிக்கப்பட்டது.

அரசியல் பணியை மேற்கொள்ள நேற்றுப்பகல் 11.30 மணியளவில் கிடாச்சூரி பகுதிக்கு சென்ற இரண்டு பெண் போராளிகள் உட்பட நான்கு போராளிகளும் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டனர். அவர்கள் கொண்டு சென்ற தொலைத்தொடர்புக்கருவிகளைத் தருமாறும் இராணுவத்தினர் வற்புறுத்தினர். இதனால், அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இதனை அடுத்து அங்கு திரண்ட மக்கள், போராளிகளை விடுதலை செயயுமாறும் இல்லையேல் இராணுவத்தினரை அங்கிருந்து செல்ல அனுமதிக்கமாட்டோம் என்றும் கூறினர்.

இதற்கு இடையில், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையைத் தெரிவித்தார். இராணுவமும் புலனாய் வுப் பிரிவினரும் சிவில் உடையில் போராளிகளைச் சோதனையிடுவதை நிறுத்த வேண்டும் என்றும் எழிலன் கேட்டுக்கொண்டார். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று முறுகல் நிலையைத் தணித்தனர். (ம-164)

### கருத்தரங்கு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தின் கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் மேற்படி பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். (எ-135)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அமைச்சரவைப பத்திரமொன்றைச் சமர்ப்பித்த பிரதமர், 2004 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் வரையிலான இரு வருடங்களுக்குச் சமாதானச் செயலகத்தின் நடவடிக்கைக் காலத்தை நீடிக்கும்படி கோரியிருந்தார்.

இக்கால நீடிப்புக் குறித்த தனது அவதானிப்புக்களை அமைச்சரவைக்கு அனுப்பியிருந்த ஜனாதிபதி, சமாதானச் செயலகத்தின் செயற்பாடுகள், அடைந்த முன்னேற்றம் குறித்து காலத்துக்குக் காலம் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் இந்த நிபந்தனையின் பேரில அப்பிரேரணைக்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

## அரசாங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை எனவும் சொன்னார்.

அரசு முன்வைக்கும் திட்டவரைவை தாங்கள் கூடி விரிவாக ஆராய்ந்த பின்னரே அதற்கான பதில அனுப்பப்படும் என்று விடுதலைப் புலிகளும் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றனர்.

அதனால், ஜோன் வெஸ்பேர்க்குடன் கிளிநொச்சியில் பேச்சுக்கள் நடத்தப்பட்டாலும் அரசின் திட்ட வரைவு தொடர்பான விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பு அவரிடம் தெரிவிக்கப்படமாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

பத்திரிகையாளர் மாநாட்டில் அமைசசர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

டோக்கியோவில் பிரதமர் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தெரி வித்த கருத்துக்கள் அரசாங்க திட்ட வரைவில் அடங்கியுள்ளன.

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத்திட்ட வரைவில் திருத்தம் செய்ய வேண்டுமென்று புலிகள் கருதினால, பேச்சு மூலம் அதறகான தீர்வைக் காணமுடியும்.

சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க அரசின் திட்டவரைவு வழிவகுக்கும்.

முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டுமென்ற கருத்தையும் விடுதலைப் புலிகளிடம் அரசு முன்வைத்துள்ளது.

நாட்டின் அரசமைப்புக்கு உட்பட்ட வகையிலேயே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் திட்டவரைவை அரசு முன்வைத்துள்ளது.

இதேவேளை -

எதிர்காலப் பேச்சுக்களில் நீதி, சட்டம், அரசியல் போன்ற விடயங்கள் தனியாகவும், அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் தனியாகவும் இடம்பெறுவது நல்லதென அரசு கருதுகிறது.

அரசின் திட்டவரைவை விடுதலைப் புலிகள் நன்றாக ஆராய்ந்த பின்னர் திருத்தங்கள் தேவையாகவிருந்தால் முன்வைக்கலாம்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலைக்கு இரு மாடிக் கட்டடமொன்று அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

சேதமடைந்த இப்பாடசாலையின் இரு வகுப்பறைத் தொகுதிகள் ஏற்கனவே புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ம-10-117)

## சூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றே அச்சுவேலிப் பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை இவரது மரண விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

நேற்று முன்தினம் இரவு கேவாவச தனது துப்பாக்கியை துப்புரவு செய்து கொண்டிருந்த போது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

(ம-ரி)

## பிரிவின் துயருடன்...



எமது மண்ணின் புகழ்பூத்த நாதஸ்வர மாமேதை கலாசூரி

### என்.கே.பத்மநாதன்

அவர்களின் மறைவால் கலங்கிநிற்கின்றோம். அவருக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கும் அதேவேளை, அவரின் பிரிவால் துயர் சுமக்கும் குடும்ப உறவுகளின் துயரத்தில் நாமும் பங்கேற்று எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர்,
திருமறைக் கலாமன்றம்.

(சி-29029) (28-31-12-18)

# மரண அறிவித்தல்கள்

### மாணிக்கவாசகர் பராசக்தி *(மீசாலை)*

ஐயாகடையடி, சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த மாணிக்கவாசகர் பராசக்தி நேற்று (17.07.2003) வியாழக்கிழமை அதிகாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாக்குட்டி மாணிக்கவாசகர் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (கொழும்பு), சாந்தா தேவி, திருப்பூங்கோதை (சுவிஸ்), கைலாயநாதன் (சுவிஸ்), கலைவல்லி (சுவிஸ்), தெய்வேந்திரம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தில்லை நாயகி, பஞ்சலிங்கம் (ஆசிரியர்), ஞானஅம்பலவாணர் (சுவிஸ்), சிவரஞ்சினி (சுவிஸ்), ரவிக்காந்தன் (சுவிஸ்), யோகராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயாகடையடி,*
*சாவகச்சேரி.*
(20398) (25-18-12-31)

தகவல்:
பிள்ளைகள்.
T.P: 070 -213388.

### இராமலிங்கம் கேசவன்

(போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம், யாழ்ப்பாணம்)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கேசவன் அவர்கள் 16.07.2003 அன்று அகால மரணமானார்.

அன்னார் இராமலிங்கம் - நாகபூசனி தம்பதிகளின் அன்பு மகனும் சுப்பிரமணியம் தங்கரத்தினத்தின் அன்பு மருமகனும் ரேணுகாதேவியின் (ஆசிரியை, யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) அன்புக் கணவரும் அட்ஷயனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சுகுமார், செந்தில்குமார் மற்றும் சுபாஸ்கரன், புஸ்பாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.07.2003) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லாறை,*
*மல்லாகம்.*
(சி-29030) (18-12-18-31)

தகவல்:
ரேணுகாதேவி கேசவன்,
(மனைவி).

### கணபதிப்பிள்ளை இளையதம்பி

இராசவீதி, நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இளையதம்பி நேற்று (17.07.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, சந்திரசேகரம் புவனேஸ்வரி, நகுலேஸ்வரி, கணபதிப்பிள்ளை (ஜேர்மனி), சோமசேகரம் (ஜேர்மனி), சகுந்தலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வீரசிங்கம் (மீசாலை), பூமணி (சிறுப்பிட்டி), பரமேஸ்வரன் (கோப்பாய்), சிவஞானசுந்தரம் (உடுப்பிட்டி), அருந்தவராணி (ஜேர்மனி), புனிதவதி (ஜேர்மனி), தர்மலிங்கம் (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.2.00 மணிக்கு சிவியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராசவீதி,*
*நீர்வேலி மேற்கு.*
(20426) (28-12-18-31)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


கணிதம் O/L
துரித மீட்டல் வகுப்புகள்
தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்
(Personal Classes).
*By:* J. கோகுலவாசன்
99, அரசடி வீதி
*(யாழ். இந்துமகளிர் கல்லூரிக்கு அண்மையில்),*
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2525
(20333) (26-24-15-19)


Diploma in Web & Multimedia
3DS MAX
CHAR. STUDIO
AFTER EFFECTS
SWIFT 3D
ஆரம்பம் 19-07-2003 காலை 07.00
MCS
324, Palaly Road, Jaffna.

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2005
பொது இரசாயனம்
ஆசிரியர்:
திரு.N.மகேஸ்வரன்
ஆரம்பம் 19-07-2003 சனி 5.30 p.m.
(25-24-15-19) C/29012

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2004
பௌதிகம் மின்புலம்
செவ்வாய், வியாழன் 5.00
PAPER CLASS
சனி, ஞாயிறு 5.30
ஆசிரியர்: திரு.ஜெயசீலன்
ஆரம்பம்:
19-07-2003 சனி 5.30
(25-24-15-19) C/29018

BRIGHTMAN
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
★ BY:லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:
19-07-2003 SAT. 3.30p.m.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH With Grammar
★ By:BRITTO
(SAT. /SUN.) 6.00p.m.
(20394) (25-24-15-19)

தொழில்நுட்ப A/L மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்
4 மாத காலத்தில் சர்வதேச தராதரம்
City & Guilds, London U.K.
Examination December - 2003
Telecom. Systems Engineering
Certificate Level - with full practicals
Course Contents: Computer Technology Mobile Radio-Callular Phone - PSTN-Radio-TV-Optical Fibre-Digital Network & Data Communication
ஆரம்பம்: 21-07-2003
21ஆம் திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
VICKNAA Tution Centre
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077-7571834
கொழும்பில்: APSS International T.P.362547
(26-24-15-19) (சி-28992)

தென்னிந்தியாவில் இருந்து
யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி
அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
கைரேகை மட்டும் 9 மணி முதல் 2 மணிவரை.
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9.00மணி முதல் மாலை 6.00மணி வரை.
ராஜகுருசாமி T.P. 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 [112], TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.
(24-15-19) (20303)

BIT
மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல்
BIT கல்வியாண்டு 2003/2004 இற்கான தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 27.07.2003 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.
யாழ் மாவட்டத்தில் BIT கற்கை நெறியினை பயில்விருக்கும் அனைத்து மாணவர்களும் இதில் இணைந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.